# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12
செப்டம்பர் -1999
இதழ் - 9



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*
**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z. செல்வநாயகம் அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து "ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 30/– மாத்திரமே.

முகவரி : தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.


## ஆசானின் அறிவுரையிலே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "இரண்டுக்கும் போதும்" | 1 |
| 2. | இரண்டாம் வேதாகம கருத்தரங்க அழைப்பிதழ் | 9 |
| 3. | சபையாக எங்கே கூடுவது? | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 14 |
| 5. | தெரிந்து கொள்ளுங்கள் | 18 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் (பாகம் – 5) | 21 |
| 7. | வாலிபர் பகுதி | 25 |
| 8. | யூதா கோத்திரத்தில் இயேசு | 29 |

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C.CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 12** **September-1999** **Issue -9**

**ஆசிரியவுரை**

## "இரண்டுக்கும் போதும்"

**இ**ரண்டுக்கும் போதும் என்பதைப் படிக்கும்போதே நமக்குள், எந்த இரண்டுக்கும்- எது போதும் என்ற கேள்விதானாக எழும். நன்மைக்கும், தீமைக்குமா அல்லது வாழ்வுக்கும், தாழ்வுக்குமா? அல்லது சுகத்திற்கும், சுகவீனத்திற்குமா அல்லது மகிழ்ச்சிக்கும், துக்கத்திற்குமா அல்லது பிழைப்பதற்கும், மரிப்பதற்குமா அல்லது வேறு எந்த இரண்டுக்கும் தான் என்று இயல்பாகவே நினைக்கத்தோன்றும். நான் பட்டியலிட்டிருக்கும் இந்தக் காரியங்களெல்லாம் இப் பூமியோடு சம்பந்தப்பட்ட காரியங்களாக இருப்பதால், நான் சொல்ல வரும் **இரண்டும்** இவைகளோடு சம்பந்தப்பட்டவையல்ல. ஏனெனில், இப் பூமியோடு முடிந்துபோகும் காரியங்களைக் குறித்துப் பேசுவதற்காக நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு (எபே.1:4) சுவிசேஷத்தினாலே அழைக்கப்படவில்லை (2 தெச 2:14) அப்படியானால் **அந்த இரண்டும்** எது என்றும், அவ்விரண்டுக்கும் போதுமானது எது தான் என்றும் நீங்கள் கேட்கக் கூடும். அதைத் தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

கடந்த. இரண்டு ட[illegible]களுக்கு முன்பான எனது உரையில். இப்பூமியில் ஒருவன் பெலத்தோடு வாழ்வதற்கு எது போதும் என்று எழுதியிருந்தேன். **அமரிக்கையும், தேவன்மீது வைக்கும் நம்பிக்கையும்** ஆகிய இரண்டு

"கை"களும் போதும் என்று வேத வசனங்களின் ஆதாரங்களோடு சொன்னேன். அது உங்களுடைய வாழ்வுக்கு "கை" கொடுத்ததென்றும் தெரிந்து கொண்டேன். ஆனால், தேவன் மீது நம்பிக்கை வைக்கும் ஒருவன், இப்பூவுலகில் சுகமாக வாழ்வது எப்படி என்பதில் மாத்திரம் நாட்டம் உள்ளவனாக இருந்தால், தேவன் அதில் பிரியப்படுவாரா? நிச்சயமாக மாட்டார். ஏனெனில், இது குறித்து தனது தாசனாகிய அப்போஸ்தலன் பவுலைக்கொண்டு மிகத்திட்டமான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார். கவனியுங்கள். **"இம்மைக்காக மாத்திரம், நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம்"** (I. கொரி 15:19).

இப்பூமியின் வாழ்வுக்கு அவர் மீது நம்பிக்கை வைக்கும் நாம், அந்த நம்பிக்கையே நம்மை பரிதபிக்கவும் செய்துவிடும் என்பதை அறியும்போது நமக்கு பயமாகத்தானே இருக்கிறது. இது குறித்து நாம் கொஞ்சமாகிலும் யோசிக்க வேண்டியது அவசியம் தானே. மேலே உள்ள வசனம், நம்முடைய நம்பிக்கை இம்மைக்காக மாத்திரம் இருக்கக்கூடாது. என்று வலியுறுத்திச் சொல்கிறது. அப்படியானால், நம்முடைய நம்பிக்கை எதற்கும் சேர்த்து இருக்கவேண்டும்? சொல்லுங்கள். ஆம், இம்மைக்கும், மறுமைக்கும், சேர்த்தே இருக்கவேண்டும். இக்கருத்தை நாம் மேலும் விளங்கிக் கொள்வதற்காக, இதே பவுலைக்கொண்டு, தேவன் தந்திருக்கும் இன்னுமொரு வசனத்தையும் கவனியுங்கள். **"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது."** (2, தீமோ. 4:8) என்று. தேவன் மீது நாம் வைக்கும் நம்பிக்கை இந்த ஜீவனுக்கும் பயன்படுகிறதென்று சொல்லும் அதே தேவனுடைய வார்த்தை, **தேவபக்தியானது** இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறதென்று கூறுகிறபடியால், இரண்டுக்கும் போதுமானதாக இருப்பது தேவபக்திதானென்று நாம் தைரியமாகச் சொல்லமுடியும். இப்பொழுது, **"தேவபக்தி" இரண்டுக்கும் போதும்** என்று சொல்லப்பட்டிருக்கும் வசனத்தின் பின்னணி பற்றி சிறிது தெரிந்துகொள்வோம்.

இந்த ஜீவனுக்கும், இனிவரும் ஜீவனுக்கும் "தேவபக்தி" போதும் என்ற கருத்து இடம் பெற்றிருக்கும் நூல், அப்போஸ்தலனாகிய பவுலாலே, தனது அந்திய காலத்தில், விசுவாசத்தால் தான் பெற்றெடுத்த உத்தம குமாரனும், லீஸ்திரா பட்டணத்தைச் சேர்ந்தவனுமான தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டுள்ள முதலாவது நிருபமாகும். அப்போஸ்தலனாலே எழுதப்பட்ட கடைசி மூன்று நூல்களுள் இதுவும் ஒன்று.

அப்போஸ்தலன் பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் உலகெங்கும் எடுத்துச் சென்றபோது எதிர்வந்த எல்லாவற்றையும் துச்சமென மதித்து, மிகுந்த வைராக்கியத்தோடு ஊழியம் செய்தார் என்பது நாமறிந்ததே. சிறையில்

தள்ளப்படும் அளவுக்கு அவருக்கு எதிர்ப்பு இருந்ததென்பதும் நமக்குத் தெரியாததல்ல.

அப்படி அவர், முதல்முறையாக சிறையிலடைக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்டவுடன், தனது சீடப்பிள்ளையாகிய தீமோத்தேயுவைக் கூட அழைத்துக்கொண்டு எபேசு பட்டணத்துக்குச் சென்றார். அங்கிருந்த சபையில் தான் கண்ட காரியங்கள், தனக்கு கடுமையான கவலையை ஏற்படுத்தினபடியால், தீமோத்தேயுவிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்து, அவனை எபேசுவிலேயே விட்டுவிட்டு தான் மட்டும் மக்கெதோனியாவிற்கு புறப்பட்டுவிடுகிறார். (1 தீமோ 1:3). பவுலடியாரின் கவலைக்கான காரணங்கள் குறைந்தது இரண்டு. **1)** சபையில் எழும்பியிருந்த கள்ளப்போதகங்கள். **2)** சபையின் பிற நடைமுறை ஒழுங்கு சம்பந்தப்பட்ட காரியங்கள். இங்கே தீமோத்தேயுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு மிகப்பெரியதும், அதிக நுட்பமானதாகவும் இருந்துள்ளது. ஆகவே அப்பொறுப்புகளை தீமோத்தேயு சரியாக நிறைவேற்ற வேண்டுமானால், அவன் செயல்பாடுகள் அப்போஸ்தலனின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதென்பது அந்த சபைக்கும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமிருந்தது.

இந்தப் பின்னணியில்தான் அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியா போய்ச் சேர்ந்தவுடன், இந்த நிருபத்தை எழுதி அனுப்பியுள்ளார். ஒருவேளை, இதிலுள்ள காரியங்கள் அப்போதைய சூழ்நிலைக்கு மிகப் பொருத்தமானதாக இருந்திருந்தாலும் கூட, இன்றளவும் சபையின் செயல்பாடுகளுக்கு ஏற்றதாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கிறது.

அடுத்து, நமது ஆராய்ச்சிக்கான வசனம் இடம்பெற்றிருக்கும் பகுதியை கவனித்தால் (2 தீமோ 4:6-16) ஒரு முக்கிய் முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் ஒரு இளைஞனின் நடத்தை எப்படியிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இங்கே தான், இம்மாதம் நமக்குப் பயன்படும் வசனமும் இடம் பெற்றுள்ளது. **"சரீர முயற்சி அற்பபிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப்பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளது"** என்று. இப்பொழுது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் இரண்டு காரியங்கள் குறித்துப் பார்ப்போம்.

## I சரீர முயற்சி – அற்ப பிரயோஜனமுள்ளது

முதலாவது, இந்த சரீரம் பற்றி பார்ப்போம். சங்கீதக்காரன் சொல்வதுபோல், சரீரமானது பிரமிக்கத்தக்க அதிசயமாய் தேவனால் உருவாக்கப்பட்டிருந்தாலும் (சங் 139:14), உருக்குலைந்து ஒருநாளிலே அழிந்துபோகும்படியாகவே அது வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், ஞானி சாலமோன் மண்ணான இந்த சரீரம் மீண்டும் மண்ணுக்கே போகும் என்று கூறுகிறார் . (பிரசங்கி 12:7). அதுமாத்திரமல்ல தேவமனிதனாகிய மோசே சொல்வது போல, பூமியில்

பிறக்கும் எல்லோரும் எழுபது வருஷமோ அல்லது பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமோ (சங் 90:10) முழுமையாக வாழ்வோம் என்பதற்கும் எந்த உத்திரவாதமுமில்லை.

மனிதனின் சரீர வாழ்வு குறித்து வேதாகமத்தின் பிற வசனங்களை நாம் கவனித்தால் அது எவ்வளவு நிலையற்றது என்பது நன்றாக விளங்கும். யோபுவில் பார்க்கும் போது. மனிதனின் சரீர வாழ்க்கை ஒரு கனவுக்கும். மேகத்திற்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது (யோபு 20 :8:7:9) புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியர் அதை புகைக்கும் (யாக் 4:14) பேதுரு ஆசிரியர் புல்லுக்கும் ஒப்பிடுகிறார் (1. பேதுரு 1:24) மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருக்கம் ஆயுசுநாட்கள் குறுகினதாகமாத்திரமல்லாமல். அது சஞ்சலம் நிறைந்ததாகவும் உள்ளதென்று வசனம் சொல்கிறது. (ஆதி. 47:9 யோவு 14:1).

குறுகின ஆயுளும். நிறைந்த சஞ்சலமும் கொண்ட இந்த சரீரத்தைக் கொண்டு. இந்த சரீர வாழ்வுக்காக எடுக்கப்படும் முயற்சிகள் கண்டிப்பாக அற்ப பிரயோஜனமுள்ளவைகளாகவே இருக்கமுடியும்.

இந்நூல் எழுதப்பட்டுள்ள மூல மொழியான கிரேக்கத்தில் "முயற்சி" என்ற வார்த்தைக்கு. ஒரு சிறப்பான பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஆம். அது ஒரு தேகப் பயிற்சி சாலையில். விடாமல் செய்யப்படும் ஒரு பயிற்சிக்குப் பயன்படும் வார்த்தை. அதாவது. ஒரு மனிதன், தன் சரீர வாழ்வுக்காக எப்படித்தான் முயற்சித்தாலும். எவ்வளவுதான் முயற்சித்தாலும். ஒரு வேளை இடைவிடாமல் முயற்சித்தாலும் அதன் பலன் அற்பமானதுதான். என்பது தான் இதன் பொருள். ஏனெனில். அவன் ஆயுள் அற்பமாக இருப்பதாலும் அவன் சரீரத்தால் எடுக்கும் முயற்சியின் பலன் இந்த அற்ப ஆயுளுக்கு மாத்திரம் பயன்படுவதாலும். அப்பலன் அற்ப பிரயோஜனமுள்ள தென்ற அந்தஸ்தைத் தான் பெறமுடியும்.

ஆம். நன்றாக சிந்தித்துப் பாருங்கள். விடா முயற்சியின் பலனாக பெறப்படும் பட்டங்களோ. அதனால் அடையும் மரியாதையோ அல்லது கடுமையான உழைப்பின் மூலம் சேர்க்கப்படும் சொத்துக்களோ சொத்துக்கள். தரும் செல்வாக்கோ. செல்வாக்கு தரும் புகழோ, புகழ் தரும் சுகமோ அல்லது ஒருவனின் சரீர முயற்சியால் பெறப்படும் எதுவோ நமது மரணத்திறகுப்பின் நம்மோடு வருவதில்லை. அவ்வளவு ஏன். ஒருவனின் சரீர முயற்சியால் சேர்ப்பவைகள் அவன் சரீர வாழ்க்கை முழுவதும் அவனோடிருக்கும் என்பதற்கும் எந்த உத்திரவாதிமுமில்லை. ஆம். வாழ்ந்து கெட்டவர்களையும். இருந்து இழந்தவர்களையும். உயர்ந்து தாழ்ந்தவர்களையும் எழுந்து விழுந்தவர்களையும் நம்முடைய கண்களுக்கு முன்பாக நாம் பார்த்துக்கொண்டுதான் உள்ளோம்.

ஆகவேதான். அப்போஸ்தலன் பவுல் தான் நேசித்த தீமோத்தேயுவுக்கு எழுதும்போது. சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்று எழுதியிருக்கிறார்.

இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும். இந்த மா மனிதனின்

வார்த்தைகளில் அடங்கியிருக்கும் பேருண்மையை உணர்ந்து. சரீர முயற்சிக்கு முக்கியத்துவம் தந்து நமது வாழ்க்கையை வீணாக்கி விடாமல். தேவனுக்கு பயந்து. அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போமாக!

## II தேவபக்தி – எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளது:

இப்பொழுது நாம் தேவபக்தி பற்றி கவனிப்போம். நாம் பார்த்த வசனத்தில் தேவ பக்தி எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்றுதான் உள்ளது. ஆனால், எல்லாவற்றுக்கும் என்பது பொருள் மாறாத மாற்று வார்த்தையாக இருப்பதால் நான் இவ்வார்த்தையை இங்கே பயன்படுத்தியுள்ளேன்.

சரி. முதலாவது, "தேவபக்தி" என்றால் என்னவென்று பார்த்து விடுவோம். தேவன் மீது நாம் வைத்திருக்கிற பக்தியென்று நாம் பொதுவாக தெரிந்து வைத்திருந்தாலும், இதற்கு இன்னும் ஆழமான பொருள் உண்டு. ஒரு வேத அறிஞன் இதற்கு இவ்விதம் விளக்கம் கொடுக்கிறார். "ஒன்றான மெய்த் தேவனை நோக்கிப் பார்ப்பதும், அவருக்கு ஏற்ற வகையில் வாழ்வதும் தான்" தேவபக்தி என்று. வேறொரு அறிஞன், "சரியான நம்பிக்கையினடிப் படையில் மேற்கொள்ளப்படும், மிகச் சரியான செயல்பாடுகளுடனான வாழ்க்கை" என்று கூறுகிறார். "தேவபக்தி" என்ற இந்த வார்த்தையை மற்ற எல்லா வேத ஆசிரியர்களைக் காட்டிலும் பவுலடியார் அதிகமாக உபயோகப்படுத்தியுள்ளார். குறிப்பாக தான் விசுவாசத்தில் பெற்றெடுத்து, தன்னால் நேசிக்கப்பட்ட இரண்டு குமாரர்களுக்கு எழுதும்போது இதை பயன்படுத்தியுள்ளார். (1 தீமோ 2:2. 3:16, 4:7-9, 6:3, 5-6,11. 2 தீமோ 3:5, தீத்து 1:3,2:12). ஒரு வேளை தனிப்பட்ட ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் "தேவபக்தி" மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துவது இதன் நோக்கமாக இருக்குமோ?

இப்படி மிகுந்த முக்கியமான அதிக ஆழமுள்ள பொருளைத் தரக்கூடிய, தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிக அவசியமான "தேவபக்தி" இரண்டுக்கும் - அதாவது இந்த ஜீவனுக்கும். இனிவரும் ஜீவனுக்கும் போதுமென்று பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு சொல்லுகிறபடியால், அது எப்படிப் போதுமானதென்று இப்பொழுது பார்ப்போம்.

### A. இந்த ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது

அநேகருடைய பொதுவான அபிப்ராயம், தேவபக்தி இந்த ஜீவனுக்கு லாயக்கற்றது என்பதுதான். ஒருவேளை இக்கருத்தை பெரும்பாலானவர்கள் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் தங்கள் நடிவடிக்கைகளால் நாளும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர். அநேகர், தேவ காரியங்களில் நாட்டம் அற்றவர்களாக இருப்பதற்குக் காரணம் இப்படிப்பட்ட மனோபாவமே. ஒருவேளை. நாட்டம் கொண்டவர்களும் நாளும் கழிந்து கொண்டே போவதற்கும் இப்படிப்பட்ட மனநிலைதான் காரணம்.

ஆனால். நாம் இப்பொழுது பார்த்த விளக்கத்தின்படியும். வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அர்த்தத்தின்படியும் ஒருவன்

தேவபக்தியாய் நடந்தால் அவன் வாழ்க்கை. இப்பூமியில் நிச்சயமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. தயவுசெய்து. வாக்கு மாறாத தேவனால் கொடுக்கப்பட்டுள்ள. கீழ்க்கண்ட வசனங்களையெல்லாம் கவனியுங்கள். "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக் கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசா 26:3) "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1:7). "…. நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 39:18).

இன்னும். இந்தப் பூமியில் ஒரு மனிதன் வாழ்வதற்கு தேவையான உணவும், உடையும் அவனுக்கு தேவபக்தியின் மூலம் கிடைக்குமென்று இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். "முதலாவது. தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" (மத் 6:33) என்று. இயேசுவின் இக்கருத்துக்கு தாவீதும் பக்கபலம் சேர்க்கிறார். "சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்: கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங் 34":10) என்று.

அது மாத்திரமல்ல. ஏராளமான கவலைகள் பெருக்கெடுத்து ஓடுகின்ற இந்த உலகத்தில் தேவபக்தியாய் நடக்கிற ஒரு மனுஷன் எதிர் நீச்சல் போட முடியும் என வசனம் கூறுகிறது. ஆம். அந்தக் கவலைகளினால். தேவபக்தியுள்ளவனும் அடித்துச் சென்று விடாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழியுண்டென்று அப்போஸ்தலர்களாகிய பவுலும். பேதுருவும் நமக்கு கூறியுள்ளனர். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல். எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும். வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும். உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் " (பிலி 4:6.7). "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால். உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5:7)என்று.

தேவபக்தி. இந்த ஜீவனுக்குப் போதுமானதென்பதற்கு ஆதாரமாக ஒரு சம்பவத்தை சொல்கிறேன். ராஜாக்களின் நாட்களில் வாழ்ந்த ஒரு பெயர் சொல்லப்படாத விதவை. தனது பூமிக்குண்டான வாழ்க்கைக்கான கடைசி ஆகாரமாக, பானையிலே ஒரு பிடி மாவும், கலசத்திலே கொஞ்சம் எண்ணெயும் வைத்துக்கொண்டு. அதைச் சமைத்துக் சாப்பிட்டுச் செத்துப்போகும்படியாக இரண்டு விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். அப்போது. கர்த்தருடைய

தீர்க்கதரிசியாகிய எலியா. அவளைக் கூப்பிட்டு கொஞ்சம் தண்ணீரும், கொஞ்சம் அப்பமும் கேட்கிறான். அவள் பயந்து. யோசித்த பொழுது. அவன், "இஸ்ரவேலின் தேவன் உன்னைக் காப்பாற்றுவார்". நீ போய் நான் சொல்கிறபடி செய் என்றான். "அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள்.... கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே. மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை". என்று வேதம் கூறுகிறது. (1 இராஜாக்கள் 17: 9-16).

இஸ்ரவேலின் தேவன் மீது பக்திகாட்டின அந்த விதவைக்கு தேவன் செய்த நன்மையைப் பாருங்கள். அவரை நம்புகிறவர்களுக்கு இந்த ஜீவனுக்குண்டான ஆசீர்வாதங்களை அவர் கண்டிப்பாகக் கூட்டித் தருகிறார்

## B. இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது

தேவபக்தி இரண்டுக்கும் போதுமென்று சொல்வதின் பொருளே. அது இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறதென்பதால் தான். ஆனால், "இனிவரும் ஜீவனைக் குறித்து" மனித சமுதாயம் பெரிதாகக் கவலைப்படுவதுபோல் தெரியவில்லை. இம்மைக்கே நேரம் போதாமலிருக்கும் போது. மறுமையைக் குறித்து சிந்திப்பதற்கும். அதற்கான செயல்களில் ஈடுபடுவதற்கும் அவனுக்கு நேரம் எங்கே?

ஆயினும், தேவனுப் பயந்து, பக்தியாய் நடக்கிற பிள்ளைகளுக்கு தேவன், இம்மைக்கானவைகளோடு மறுமைக்கானவைகளையும் வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்பதை நாம் தெரிந்து கொள்ளாமலிருக்கக் கூடாது.

ஒரு சமயம் அப்போஸ்தலன் பேதுரு, நாங்கள் உம்மைப் பின்பற்றினதற்குக் கூலியாக எங்களுக்கு என்ன கிடைக்குமென்று கேட்டான். "அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: .......இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், "மறுமையிலே நித்திய ஜீவனையும்" அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". (மாற்கு 10:28-30) என்றார். ஆம் ஒருவனுடைய தேவபக்தியினாலே கிடைக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம் "நித்தியஜீவன்".

அதுமாத்திரமல்ல, தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவருக்கும் "வாடாத ஜீவ கிரீடம்" வைக்கப்பட்டிருக்கிறதென்று வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (2. தீமோ. 4:8) இந்த ஜீவகிரீடம் பற்றி, யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்திலும் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. (வெளி 2:10).

இந்தப் பூமியின் வாழ்க்கையில் ஒருவனுடைய ஜீவன் ஒரு நாளில் போகக் கூடியதாகவும், இந்தப்பூமியின் வாழ்க்கையில் புகழுக்குள் சென்றவர்களுக்கு சூட்டப்படும். கிரீடம் வாடிப்போகிற தன்மையுடையதாகவும் இருக்கிறது. ஆனால், தேவபக்தியில் தொடர்ந்து வாழ்பவர்களுக்கோ நித்திய ஜீவனும், வாடாத ஜீவகிரீடமும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது இது என்ன லேசான காரியமா? இந்த இரண்டினுடைய மேன்மை உங்களுக்குப் புரிகிறதா? இப்பொழுதாவது தேவபக்தி எல்லாவற்றுக்கும் அதாவது இந்த ஜீவனுக்கும், இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதென்று விளங்குகிறதா? சொல்லுங்கள்.

தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரன் இவ்வளவு நன்மைகளை, இழந்து விடக்கூடாதென்பதற்காகத்தான் என் மகனே, நீ தேவபக்திக்காக முயற்சி பண்ணு. தேவபக்தியில் நட. தேவபக்தியில் தேறினவாயிரு என்று அடிக்கடி கூறுகிறார். ஆகையால், அருமையானவர்களே, நம் ஒவ்வொருவருடைய, இரண்டு வாழ்க்கையும் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் நாம் "தேவ பக்தியாய்" நடப்பது மிகவும் அவசியம்.

இந்தக் கட்டுரையை முடிக்கும் முன்பாக, இது சம்பந்தப்பட்ட இன்னொரு காரியத்தையும் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். நாம் இப்பொழுது தியானித்த வேத வசனத்திற்கு (1 தீமோ 4:8) அடுத்த வசனத்தையும் தயவுகூர்ந்து கவனியுங்கள் "இந்த வார்ர்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது (4:9)என்றுள்ளது. அதாவது, தேவபக்தி இம்மைக்கும், மறுமைக்கும் போதுமானதாக இருக்கிறதென்று பவுல் சொல்வது உண்மை என்று அங்கே மீண்டும் சொல்கிறார். அல்லது பரிசுத்த ஆவியானவர், அது உண்மைதானென்று எழுதும்படி தூண்டுகிறார். ஏன்?

"இந்த வார்த்தை உண்மை"என்று பவுல் இங்கே மாத்திரம் எழுதாமல் வேறுசில இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது ....." (1 தீமோ 1 :15). இன்னும், "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை" (1 தீமோ 3:1) இந்த வசனங்களையெல்லாம் கவனிக்கும்போது நமக்கொரு உண்மை புலனாகிறது. அதாவது, மனிதர்கள், சொல்லப்படுகின்ற தேவ காரியத்தின் மேன்மையை உணரமுடியாமல் தடுமாறி, தனக்கிருக்கிற சிற்றறிவினடிப்படையில், அதை அணுகி, முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல், அவைகளை ஒதுக்கி விடுவதற்கு வாய்ப்பிருக்கிறதென்று, பவுலடியார் எப்பொழுதெல்லாம் கருதினாரோ அல்லது பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதெல்லாம் எண்ணினாரோ, அப்பொழுதெல்லாம் "இந்த வார்த்தை உண்மையானது" என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் பொருள், இது சத்தியமான வார்த்தை, உனக்கு விளங்கவில்லையென்பதற்காக ஏற்றுக்கொள்ளமால் விட்டுவிடாதே, எப்படியாவது ஏற்று இதன்படி செய் என்பதுதான்.

அப்படியானல், அருமையானவர்களே, "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதென்றும் எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளதென்றும்" பவுல் சொல்லிவிட்டு, "இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுள்ளதென்று சொல்லியிருக்கிறபடியால், நாம் நம்முடைய வாழ்க்கையில் இவ்வார்த்தைகளை அட்சரம் பிசகாமல் அப்படியே ஏற்றுக்கொண்டு, தேவ பக்தியாய் முழுமையாக நடந்து, இரண்டு ஜீவன்களுக்குமான ஆசீர்வாதங்களைப் பெற்று இம்மையில் சுக ஜீவிகளாகவும், மறுமையில் நித்திய ஜீவிகளாகவும் ஜீவிப்பதற்கு பரலோகத்தின் தேவன் உங்களுக்கு துணை புரிவாராக ஆமென்.

**S. ராஜநாயகம்**

ஜெபியுங்கள்! திட்டமிடுங்கள்! பங்குபெறுங்கள்!

**காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்**
**உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்**
**இணைந்து நடத்தும்**

# இரண்டாம் வேதாகம கருத்தரங்கம்

*நாள்* : **அக்டோபர் 18,19 – 1999**
*திங்கள்,செவ்வாய்* (அரசு விடுமுறை நாட்கள்)

நேரம் : *தினமும் காலை 9:30 மணி முதல் 12:30 மணி வரை*
*மாலை 2:00 மணி முதல் 5:00 மணி வரை*

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
*தாராபுரம் ரோடு*
*காங்கேயம் - 638 701*

பேச்சாளர்கள் : தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் தேவ தாசர்கள்

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.

பதிவு கட்டணம் ரூ 20/- மட்டுமே

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.
**(இவ்வருடம் கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது)**

தொடர்பு முகவரி:–
*கிறிஸ்துவின் சபை*
தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701
போன் : 04257 – 20030

# சபையாக எங்கே கூடுவது?

"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி" என்பதே நம் தொடர்பாடத்தின் மையக் கருத்து. நீங்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர் என்று நம்புகிறோம். மாறாக நீங்கள் அப்படியில்லை என்றால், நீங்கள் அங்கத்தினர் ஆகவேண்டும் என்று யாசிக்கிறோம். சுவிசேஷம் என்பது இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியாகும். (1 கொரி 15:1-4) பவுல், சுவிசேஷம் இரட்சிக்கப்படுவதற்கு தேவ பெலனாய் இருக்கிறது என்கிறார் (ரோமர் 1:16). சுவிசேஷத்திற்கு கட்டளைகள் உண்டு. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், பாவத்திலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். (எபி 11:6; அப். 17:30; மத். 10:32. அப்.2:38) இப்பொழுது நீங்கள் இந்த கட்டளைகளுக்கு முழுஇருதயத்தோடு கீழ்ப்படிந்தால் கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்ப்பார். (அப் 2:47). நீங்கள் இதை செய்யவேண்டும் அல்லது அவரை நியாத்தீர்ப்பு நாளில் சந்திக்கவேண்டியதாயிருக்கும். பவுல் சொல்லுகிறதை கவனியுங்கள், கர்த்தராகிய இயேசு, தேவனை அறியாதவர்களுக்கும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு வெளிப்படுவார் என்கிறார். (2 தெச 1:7-9).

இப்பொழுதும், நீங்கள் சபையில் அங்கம் வகித்தால், அல்லது அங்கத்தினராக மாறுவீர்கள் என்றால், நீங்கள் இருக்கும் இடத்தில் கர்த்தருடைய சபை இல்லாதிருந்தால், அதை ஆரம்பிக்க உங்களை ஊக்கப்படுத்துகிறோம். நாங்கள் முன்னமே சொன்னதுபோல் சபை ஆரம்பிக்கும் இந்த செயல் உங்கள் சொந்த விருப்பத்தாலும் மற்றும் உங்களைச் சுற்றி வாழும் மக்களின் நன்மைக்காகவும் செய்யப்படுகின்ற ஒன்று. அவர்களுக்குபோதித்து, மனமாற்றத்தை உண்டாக்க உழைப்பு தேவை. இப்படிச் செய்வதின் மூலம் கர்த்தருடைய நோக்கத்தை வளர்ச்சியடையச் செய்து, விரிவடைய வழிவகுக்கும். இதை படிக்கும் அநேக வாசகர்கள் வசிக்குமிடத்தில் கர்த்தருடைய சபை இருக்காது என்பது எங்களுக்கு திட்டமாய் தெரியும். நாங்கள் முன்னமே சொன்னது போல், நீங்கள் இருக்குமிடத்திலேயே அவருடைய வேலைக்கென்று கர்த்தர் உங்களை பயன்படுத்துவார். உங்களோடு இதைக் குறித்து தொடர்பு கொள்ள மற்றும் சில விளக்கங்கள் தர நாங்கள் மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறோம்.

இந்த முறை நம் பாடத்தில் இவைகளை மனதில் கொண்டு, "நாம் எங்கு சபையாக கூடலாம்" என்பதைக் குறித்து படிப்போம்.

ஒவ்வொரு வாரமும் கர்த்தரை ஆராதிக்க ஒரு கூட்ட மக்கள் கூடிவரப்போகிறார்கள் என்றால், அவர்களுக்கு பொதுவான ஒரு இடம் தேவை

என்பது யதார்த்தம். இதற்கு அநேக வழிமுறைகள் இருந்தாலும், ஆதி திருச்சபை இந்தக் காரியத்தில் எப்படி செயல்பட்டது என்பதை முதலில் பார்ப்போம்.

பெந்தெகோஸ்தே என்னும் நாளில், எருசலேம் பட்டணத்தில் சபை ஆரம்பிக்கப்பட்ட போது, அப்போஸ்தலர்கள் பெரும்திரளான மக்கள் கூட்டத்திற்கு பிரசங்கித்தார்கள். ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார்கள் என்பது நமக்கு நன்றாய் தெரிந்த ஒன்று . (அப் 2:41) இது, திறந்த வெளியில் நடந்ததா? அல்லது அரங்கத்தில் நடந்ததா? அல்லது தேவாலயத்து மைதானங்களில் நடந்ததா? அல்லது மற்ற இடத்தில் நடந்ததா? எங்கு நடந்தது என்பது குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. அப் 2:42ல் மன மாற்றம் அடைந்தவர்களை குறித்து பேசும்பொழுது "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், உறுதியாய்த் தரித்திருந்து, ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனை துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப் 2:46,47) அப்போஸதலர்களாகிய பேதுருவும், யோவானும், தேவாலயத்தின் அலங்காரவாசலண்டையில் ஒரு சப்பாணியை குணமாக்கினார்கள். அது, அவர்கள் தேவாலயத்தின் சாலமோன் மண்டபத்தில் கூடியிருந்த திரளான மக்களுக்குப் பிரசங்கிக்கும்படியாக சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தது. அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று பேதுரு அவர்களுக்குச் சொன்னபிறகு, இவ்விதமாய் வாசிக்கிறோம், "வசனத்தை கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள், அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" (அப் 4:4) ஆகையால், அந்நாட்களில் சபையானது வளர்ந்து கொண்டிருந்ததென்று தெரிகிறது. ஆனால், இவர்களெல்லாம் எங்கே கூடினார்கள் என்ற கேள்வி மீண்டும் எழுகிறது? ஒருவேளை அவர்கள் தொடர்ந்து தேவாலயத்தில் கூடிவந்திருக்கலாம். ஆனால், அப்பொழுது கூட வேறொரு பிரச்சினைக்கு அங்கு வாய்ப்பு வருகிறது. ஏனெனில், அவர்கள் தேவாலயத்தில் கூடி மோசேயின் பிரமாணத்தின்படி தேவனை ஆராதிக்காமல், கிறிஸ்துவின் உபதேசத்தின்படியாக ஆராதித்தார்கள்.

இங்கே, நாம் உபதேசிப்பதற்கான ஒரு இடத்தைக் குறித்து அதிகமாக சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. அந்த காரியத்தை எங்கு வேண்டுமானாலும் செய்ய முடியும், உதாரணமாக, எத்தியோப்பியாவிலிருந்து வந்த ஒரு மனிதனை பிலிப்பு, வனாந்திரமான ஒரு இடத்திலே சந்தித்து, அவனுடைய இரதத்திலே அவனோடு சேர்ந்து கொள்ளும்படியாக வாய்ப்புப் பெற்று, தொடர்ந்து அவனோடு மேற்கொண்ட பிரயாணத்திலே அவனுக்கு போதிக்க முடிந்தது. (அப் 8:26,39). அப்போஸ்தலர் 9ம் அதிகாரத்தில், அனனியா என்பவன் சவுலை நேர் தெருவிலே கண்டு, கர்த்தருக்கு கீழ்ப்படிவதற்கு அவன் என்ன செய்யவேண்டுமென்று சொல்லி, அவனுடைய கீழ்ப்படிதலிலே அவனுக்கு

உதவினான். பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலேயே பிலிப்பிய ஜெயில் அதிகாரிக்கும். அவன் குடும்பத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். (அப் 16) யூதர்களுக்கு போதிக்க பவுல் அநேக முறை பல பட்டணத்து ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார் இன்னும். நாம் தொடர்ந்து. பவுல் சுவிசேஷத்தை வேறு பல இடங்களில் போதித்தார் என்ற குறிப்பிட முடியும்.

பவுல் எபேசு பட்டணத்திலிருக்கையில் "பின்பு பவுல் ஜெப ஆலயத்தில பிரவேசித்து. தைரியமாய்ப் பிரசங்கித்து. மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி. புத்தி சொல்லிக்கொண்டு வந்தார். சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது. அவன் அவர்களை விட்டு விலகி. சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு. திறன்னு என்னும் ஒருவனுடைய வித்யாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டு வந்தார். இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள். (அப் 19:8-10). இப்பொழுதும். பவுல் பாடம் நடத்தின வித்தியாசலை அல்லது பள்ளி என்று சொல்லும்போது அதில் கூடி வருவதற்கென்று கட்டிடங்கள் இருந்திருக்கும். தேவனுடைய சித்தத்தை போதிக்கவே ஜெபஆலயத்திற்கு பவுல் சென்றபோதிலும் அங்கே கூடி ஆராதிக்கவில்லை என்று எப்படி சொல்லுகிறோமோ அதைப்போலவே இந்த வித்தியாசாலையிலே கூடி ஆராதித்தார்கள் என்று கூறுவதற்கு அதிக வாய்ப்பில்லை. ஆகவே மீண்டும் இந்த கேள்வியை எழுப்புகிறோம். அந்த நாட்களில் கர்த்தருடைய ஜனம் அவரை ஆராதிக்க எங்கே கூடியது?

அப்பொழுதும் வீடுகள் அவர்களுக்கென்று இருந்தது. பவுல். வெளியரங்கமான இடங்களிலும். வீடுகள் தோறும் பிரசங்கித்தேன் என்று கூறுகிறார். (அப் 20:20). பவுல் ரோமபுரிக்கு . அழைத்துகொண்டு போகப்படுகிறதை குறித்து நாம் வாசிக்கிறோம். "பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுவதும் தங்கி. தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு. மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். (அப் 28:30.31) இரண்டு வருஷம் தனக்கென்று வாடகைக்கு எடுத்த வீட்டில் தங்கியிருப்பது உண்மையாய் இருக்கிறபோது அவன் அங்கே ஆராதித்திருக்கக் கூடும். ஆக்கில்லால். பிரிஸ்கில்லாலுடைய வீட்டில் கூடி வந்த சபையை பற்றி பவுல் குறிப்பிடுகிறார். (ரோமர் 16:5: 1.கொரி. 16:19). அநேக சபைகள் வீட்டில் கூடி வந்தது என்பதை பற்றி கொஞ்சமும் சந்தேகமில்லை.

ஆனால். கொரிந்து சபை எங்கே கூடியது? பிலிப்பு பட்டணத்து சபையைக் குறித்து என்ன சொல்லுவோம்? பவுல் இந்தப் பட்டணத்திற்குள் சென்று லீதியாளையும். அவள் குடும்பத்தையும் வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற ஆற்றினருகே கண்டு. போதித்து மனமாற்றம் அடையச்செய்தான் என்பது நாம் அறிந்த ஒன்று. பின்பு அவ்வன் சிறைச்சாலை அதிகாரியையும். அவன் வீட்டாரையும் மனமாற்றம் அடையச் செய்தான். அங்கே சபை வளர்ந்தது

மூப்பர்கள், உதவிக்காரர்கள் இருக்குமளவுக்கு சபை வளர்ந்தோங்கியது. ஏனென்றால் பிலிப்பு பட்டணத்து சபைக்கு பவுல் எழுதுகையில் "பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது" (பிலி 1:1) என்கிறார். ஆனால் அவர்கள் எங்கே சபையாக கூடிவந்தார்கள் என்பதுதான் கேள்வி.

சபைக்கென்று தனி இடம் இருப்பது கர்த்தருக்கு எதிரான ஒன்று என்று வேதாகம வசனங்கள் கூறுவதாக தெரியவில்லை. ஆனாலும் அந்த காரியங்களைப் பற்றி வசனங்கள் ஆழமாய்ச்செல்லவில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்தில தேவன் இஸ்ரவேலர்களை ஆசரிப்பு கூடாரம் கட்ட கட்டளை கொடுத்து அவர்களை அங்கு சந்தித்தும் வந்தார் என்பது நமக்கு தெரிந்த உண்மை. பின்பு எருசலேமில் சாலொமோன் ஆலயத்தை கட்டினார். மீண்டும் அங்கே தேவன் இஸ்ரவேலரோடு சம்பாஷித்தார். ஆனால், இயேசு சமாரிய பெண்ணிடம் பேசுகையில் ஸ்திரியே இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது என்றார். (யோவ. 4:1-30)

ஆதலால், கர்த்தர் கட்டிடத்தை வலியுருத்தவில்லை என்பதை இது மிகத் தெளிவாய் காட்டுகிறது. ஏனெனில் இவ்விடங்கள் கோவில்களாகவும், "பரிசுத்த ஸ்தலங்களாகவும்" மாறிவிடக் கூடாதே. நாமே இது குறித்து அக்கறை எடுத்துக் கொள்ளுவோமென்று கர்த்தருக்கு தெரிந்திருக்கிறது.

இன்றைய நாட்களை குறித்து என்ன சொல்லுவோம்? சபையானது எங்கே கூடி வரலாம்? அது வீட்டிலோ, பள்ளிக்கட்டிடத்திலோ, வாடகை இடத்திலோ கூடலாம். கர்த்தர் இதை தம் ஜனத்தாரிடமே விட்டு விட்டார். நாம் எங்கு சபையாக கூடவேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ அங்கு கூடலாம். கண்டிப்பாக சபை வளர்ந்து எண்ணிக்கையிலே பெரியதாக மாறும்போது கூடி வரக்கூடிய இடத்தின் தேவையும் பெருகும். சபை பெரிதானால், இடம் ஏற்படுத்தி கொள்ளுமளவுக்கு பொருளாதார வசதியும் வளரும் என்பது யதார்த்தம். சபை தனக்கென்று ஒரு இடத்தை கொள்முதல் செய்து அதில் கட்டிடம் எழுப்பலாம்.

ஆனால் ஒன்றை நினைவில் வைக்கவேண்டியது அவசியம், கட்டிடம் என்றும் சபையாகாது. அது ஒரு "பரிசுத்த ஸ்தலமுமல்ல". அது கர்த்தரை தொழும் வண்ணமாக மற்றும் வேத ஆராய்ச்சி செய்யும்படியாக, அவருடைய ஜனங்கள் கூடி வரும் ஒரு இடம் அவ்வளவுதான். கூடிவரும் இடம் அவ்வளவு முக்கியம் வாய்ந்தது அல்ல. அந்த இடத்தில் கூடிவரும் கர்த்தருடைய மக்கள்தான் முக்கியமானவர்கள். ஆகவே இது உங்களை பெரிதாய் வருத்துமளவுக்கு இதில் ஒன்றுமில்லை. கண்டிப்பாக நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஆரம்பிக்கப்பட்டால், கூடும் இடம் குறித்து பின்பு ஒழுங்கு செய்யலாம். இப்பொழுது, நாம் பார்த்த இந்த காரியங்கள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நான் நம்புகிறேன். மீதிகாரியங்களை தொடர்ந்து அடுத்த மாதம் பார்ப்போம்.

**J.C. சோட்.**

# "இராஜாவுக்கான வெகுமதிகள்"

"என்னால் உன்னோடு ஒத்துப்போகமுடியாது" என்று கோபத்துடன் ரேச்சலை குற்றம் சாட்டும் விதமாக கூறுகிறாள் மேரி. நீயும், ஆண்ட்ரூவும் செய்வதுதான் சரி, மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு என்று நீ எப்படி உறுதியாகக் கூறுகிறாய்? நீங்கள் ஆரம்பித்த இந்த சிறிய சபை அப்படியென்ன அதிவிசேஷம் கொண்டது? நூற்றுக்கணக்கான சபைகளில் இதுவும் ஒரு சபை. உன்னுடைய சபைதான் பெரியது என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. உங்களுக்கு குறைந்த பட்சம் ஒரு பாஸ்டராவது அல்லது ஒரு சபைக் கட்டிடமாவதுமில்லை.

ரேச்சலின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. மேரி, மேரி தயவு செய்து என்மீதும், ஆண்ட்ரூ மீதும் கோபப்படாதே என ரேச்சல் கெஞ்சுகிறாள். உன்னுடைய கோணத்திலிருந்து நீ நினைப்பது சரி என்று நான் உணர்கிறேன் ஆனால் நீ கேட்டவைகளையெல்லாம் மறந்துவிடுவதற்கு முயற்சி செய். அதாவது, "எல்லா சபையும் ஒன்று", "நல்ல சபை" அல்லது "நீ விரும்புகிற சபைக்குச் செல்லலாம்" அல்லது "கிறிஸ்துவை நீ உன் சொந்த இரட்சகராக உன் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளலாம் "அல்லது "இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும்" என்பவைகளையெல்லாம் இதில் அடக்கம். ஆக, இப்படி நிறைய காரியங்களை, திருப்ப, திருப்ப, மேலும், மேலும் சொல்லிக்கொண்டே போகலாம் என்னவோ அவைகளெல்லாம் வேதாகமத்தில் இருப்பதுபோல. ஆனால் அவைகளெல்லாம் அதில் இல்லை! அவைகளையெல்லாம் நீங்கள் நீண்ட காலமாக கேட்டுக் கொண்டிருந்தால் அவைகள் உண்மை என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் நாங்கள் வேதாகமத்தில் உள்ள ஒரே சபையான ஆதிசபையை உங்களுக்கு அடையாளங்காட்டும்போது, நாங்கள் காட்டுகிற அந்த சபை பொய்யென்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஏனென்றால் இதற்கு முன்பு நீங்கள் இதைப் பற்றிக் கேள்விப்படவேயில்லை!

"நான் இதைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்" மேரி சீக்கிரமாக பதில் சொல்கிறாள். எல்லா சபைகளிலுள்ள இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து ஆவிக்குரிய கிறிஸ்துவின் சபையை உருவாக்குகிறார்கள் என்று எங்களுடைய பாஸ்டர் சொன்னதைக் கேட்டிருக்கிறேன். அவரும் ஒரே சபையைப் பற்றித்தான் கூறுகிறார். ஆனால், இது ஏதோ ஓரிடத்தில் கூடுகிற ஒரு கூட்டத்தார் மட்டுமல்ல. இது எல்லா சபைகளிலுமுள்ள நல்லவர்கள் அடங்கிய ஒரு கூட்டம்.

"ஆனால் மேரி, சபையைப் பற்றி நீ வேதாகமத்தில் வாசிக்கும்பொழுது அவர்கள் ஏதோ கண்ணுக்குப் புலப்படாத வித்தியாசப்பட்ட நம்பிக்கைகளையும், ஆங்காங்கே வித்தியாசமான குழுக்களாகப் பிரிந்து

செயல்படும் கூட்டமல்ல என்பது தெரியும். இது கிறிஸ்தவர்களனைவரும் ஒன்று சேர்ந்து சபையாக கூடி கொரிந்து பட்டணத்தில் ஆராதித்தார்கள் என்றும். அதே நம்பிக்கையோடே அதே விதமாக எருசலேமில் கூடினார்கள் என்றும். அவர்களைப் போலவே எபேசு பட்டணத்திலும் செய்தார்கள் மற்றும் உலகமுழுவதிலுமுள்ள வெவ்வேறு பட்டணங்களிலும் இதே விதமாக செய்து வந்தார்கள் என்றும் பார்க்கலாம் அவர்கள் வெவ்வேறு சபையைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஒரு கிறிஸ்தவன் ஒரு பட்டணத்திலிருந்து இன்னொரு பட்டணத்திற்குச் செல்லலாம். அவன் அங்கு சகோதரர்களைக் கண்டுபிடித்தால் அவர்களால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படுவான். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் அவர்கள் அனைவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" ரேச்சல் என விசாரித்தாள். "பார் இதோ ஒத்தவாக்கியப் புத்தகம் இருக்கிறது. வேதாகமத்தில் ஏதாவது பிரிவினைச் சபைகள் இருக்கிறதா என்று கண்டுபிடி! அவைகள் அங்கு இல்லை!

"அவைகளில் ஒன்று கூட இல்லையா?" என மேரி கேட்டாள். "இல்லை. எதுவுமே இல்லை. "நமக்கிருக்கும் இந்த அபாயகரமான சூழ்நிலை குறித்து நீ எண்ணிப்பார்க்கவில்லையா மேரி?" ரேச்சல் பரிந்துரைக்கும் கண்களோடு கேட்கிறாள். நாம் நமக்கு போதிக்கப்பட்ட எல்லா மார்க்க உண்மைகளையும் எல்லா மார்க்க காரியங்களையும் நம்முடைய மனதிலிருந்து எடுத்துப் போடும் பொழுதுதான். நாம் தேவனுடைய வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொண்டோம் என்று பொருள் உண்மையில் நாம் எதைச் செய்தோமோ அதை வசனங்களின்படி செய்யவேண்டியவர்களாயிருந்தோம்.

ஆனால் நீ சொல்வது மற்ற எல்லோரையும் விட வித்தியாசமாக இருக்கிறது என்று மறுப்பு தெரிவித்தாள் மேரி. உன்னுடைய ஆராதனை கூட வித்தியாசமானதாகவே இருக்கிறது. பாட்டுபாடுவதுகூட வேறுபட்டு. ஒரு பியானோவோ அல்லது எந்த ஒரு இசைக்கருவியும் இல்லாமல் இருக்கிறது. ஒருவேளை இனிமேல் இசைக்கருவி வாசிக்க ஒருவரை தேர்ந்தெடுப்பாயா?

அங்கேதான் நாம் கவனமாகயிருக்க வேண்டும். மேரி. ஆராதனை என்பது "நமக்காக" அல்ல. அல்லது வேறுபட்ட ஒரு சத்தத்திற்காக அல்ல. அல்லது நமக்கு நன்றாக இருக்கிறது என்பதற்காக அல்ல. உண்மையான ஆராதனை என்பது தேவனை மகிமைப்படுத்துவதற்காகத்தான். அவர் எதை எதிர்பார்க்கிறாரோ அதை செய்வது தான். ஏனென்றால் அதன் மூலம் அவரை நாம் பிரியப்படுத்துகிறோம்.

"பழைய கால கதைகளிலே ராஜாக்கள் முழு அதிகாரமும் பெற்றிருந்தபொழுது என்ன பரிசுகளை அவருக்குக் கொண்டு வரவேண்டுமென்று அவருக்கு கீழ் இருந்தவர்களுக்கு கட்டளையிடப்படும். அவருக்கு முன்பாக வருகிறவர்கள் வணங்கிய தலைகளோடு. பரிசுகளை வழங்கும்போது பயத்துடனும். தாழ்மையுடனும் வருவார்கள். ஒருவேளை அவரை பிரியப்படுத்தாமல் இருந்தால் தங்களை உயிரோடு வைப்பாரோ அல்லது சாகச் செய்து விடுவாரோ என்று பயத்துடன் அவ்வாறு செய்வார்கள்.

தேவன் நம்முடைய ராஜாவாக இருக்கிறார். நம்மெல்லார்மேலும் முழுஅதிகாரமும் அவருக்கே இருக்கிறது. இயேசு கிறிஸ்து நம்மை எச்சரித்திருக்கிறார். யாரெல்லாம் தேவனைத் தொழுது கொள்ளுகிறார்களோ அவர்கள் ஆவியோடும். உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும். (யோவா 4:24) மனிதனுடைய கோட்பாடுகளின் மூலம் அவரை ஆராதித்தால் அது வீணான ஆராதனையாகும். இங்கே மத் 15:9-ல் இயேசு கிறிஸ்து கூறும் எச்சரிப்பைப்பார். "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து. வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்"

"பழைய கால இராஜாக்களைப் போலவே தேவனும் அவருடைய பிரசன்னத்திற்கு வரும்போது ஏதாவது ஒரு பரிசை அவருக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்கிறார். முதலாவதாக. அவருக்கு பரிசாக நம்முடைய இருதயத்தை கேட்கிறார். வசனத்தை படிக்கும்போதே நம்முடைய இருதயத்தை திறந்து வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் நமக்கு செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி செலுத்தும் வண்ணமாக நம்முடைய ஜெபம் அமையவேண்டும் என எதிர்பார்க்கிறார். அத்தோடு நம்முடைய தேவைகளுக்காக அவரிடம் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்றுக் கொடுத்த ஜெபத்தை மத். 6:9-13 வசனப் பகுதிகளில் காணலாம்.

தேவனை ஆராதிப்பதில் மற்றொரு முக்கியப் பங்கு அவருடைய குமாரனின் மரணத்தை நினைவு கூறும் பந்தி ஆகும். ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு இது முக்கியமான ஒன்றாக இருந்தது. ஒரு சமயம் (அப் 20:6-11) அப்போஸ்தலனாகிய பவுல் துரோவா பட்டணத்தில் திங்கள் கிழமை முதல் ஞாயிற்றுக் கிழமை வரை கிறிஸ்தவர்களோடு சேர்ந்து அப்பம் பிட்பதற்காக காத்திருந்தார். அந்தப் பந்தி இயேசுவால் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் துரோவா பட்டணத்து சம்பவத்தில் ஆராதனை முடித்து அன்று இரவு முழுவதும் பிரசங்கித்து பவுலும் அவனோடிருந்தவர்களும் அவசரமாக புறப்படவேண்டியிருந்தது. இந்த மாதிரி வசனப் பகுதிகளை கவனமாகப் படித்தால் இந்த பந்தியினுடைய முக்கியத்துவம் நமக்கு விளங்கும். இதுதான் ஆராதனையின் முக்கிய பகுதியாக ஒவ்வொரு ஞாயிறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்று பெரும்பாலான மக்கள் செய்வதுபோல வருடத்திற்கு ஒருமுறையோ அல்லது இரண்டு முறையோ கடைபிடிக்கக்கூடாது.

தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அடுத்த காரியம் நம்முடைய சம்பாத்தியத்திலிருந்து அவருக்குக் கொடுப்பது. இங்கே (1.கொரி :16:2) (2 கொரி9) ஆகிய பகுதிகளில் உதாரத்துவமாகவும். உற்சாகமாகவும் தேவனுக்கு கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம்.

அவரை ஆராதிக்கும்போது அவருக்காக நாம் கொடுக்கவேண்டு ம் என அவர் எதிர்பார்க்கும் ஐந்தாவது ஈவு "உதடுகளின் கனியாகிற ஸ்தோத்திரபலி" எபி 13:15 ஆதித் திருச்சபையிலே எந்த வகையான இசைமுறை

கையாளப்பட்டது. என்று நானும் ஆண்ட்ரூவும் பாடல் பற்றி கூறும் எல்லா வசனப்பகுதிகளிலும் எடுத்துப் பார்த்தோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாடுங்கள் என்றுதான் உள்ளது. நம்முடைய ராஜாவாகிய அவர் ஒரே ஒரு வகையான இசையைக் கேட்கும்போது. அதாவது அவர் உண்டாக்கின கருவியிலிருந்து கேட்கும்போது அதற்குமாறாக ஒரு பியானோவையோ. ஆர்கனையோ அல்லது கித்தாரையோ அவர் முன் கொண்டு செல்ல முடியாது. நம்மால் முடியுமா. மேரி?'' ரேச்சல் கேட்டாள். நாம் பிரியப்படுத்துவது தேவன் ஒருவரை மட்டுமே என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நம்மை நாமே பிரியப்படுத்தி கொள்ளக் கூடாது. பல வருடக் கணக்காக புதிய. புதிய மனிதக் கோட்டுபாடுகளால் நிறைய மாற்றங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. ஆனால் இயேசு கிறிஸ்து எச்சரித்தது போல மனிதனுடைய உபதேசங்களின்படி தொழுதுகொள்வது இன்றும் வீணான ஒன்றுதான்''.

ரேச்சல் தன்னுடைய விளக்கங்களை கொடுத்தது முடித்த பின்பு மேரி அமைதியாக உட்கார்ந்து கொண்டாள். கடைசியாக அவள் ரேச்சலிடம் நீ கூறிய யாவும் சிந்திக்கத்தக்கதாக உள்ளது. ஒருவேளை அது வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் நான் இன்னும் நேரங்களை படிப்பதற்கு ஒதுக்கவேண்டும் என்றாள்.

**R.R, Nayagam** **B.B. Choate**


## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு. நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு. சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு. எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் (Gospel Tracts) உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை**. தேவைக்கு முந்துங்கள்.

**தலைப்புகள்**

1. உன்னை நீயே எண்ணிப்பார்
2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்
3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?
4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்....
5. ஞானஸ்நானம்
6. யார் கிறிஸ்தவன்?
7. ஆராதனை
8. சபை என்பது என்ன?

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் - 27. காங்கேயம் - 638 701.

தெரிந்து கொள்ளுங்கள்

# "ஜெபித்தல்"

## பாடம் - 7

**முன்னுரை**

1. ஜெபிக்க வேண்டுமென்ற சுபாவம் அல்லது மனோபாவம் உலகளாகிய அளவில் உள்ளது.
2. ஜெபம் பற்றி, கிட்டதட்ட சரித்திரத்தின் எல்லா காலகட்டத்திலும் தெளிவாக்கப்பட்டுள்ளது.
3. ஜெபிப்பதற்கும், ஆராதிப்பதற்கும் மனுக்குலத்துக்குள்ளாக இருக்கும் உணர்வை பவுல். அப். 17.22-29-ல் அங்கீகரித்துள்ளார்.

**விவாதம்**

### I "ஜெபம்" என்பது என்ன?

**A** மனிதன் தேவனோடு பேசுவதுதான் ஜெபம் என்பது. இது தேவனிடத்தில் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம். ரோமர் 10:1

**B** ஜெபத்தில் அடங்கியிருக்கும் பகுதிகள்.

1. கெஞ்சிகேட்டல் - ஆர்வத்தோடு செய்யப்படும் வேண்டுதல்
2. விண்ணபப்பம்பண்ணுதல் - இதன் பொருள் "தேவனை நோக்கி விரும்புவரை தெரிவித்தல்"
3. பரிந்து கேட்டல் - மற்றவருக்காக கேட்டல்.
4. நன்றி செலுத்துதல் - பெற்றுக்கொண்டவைகளுக்காக நன்றி சொல்லுதல்.

### II யாருடைய ஜெபத்தை தேவன் கேட்கிறார்?

**A** தேவனுடைய பிள்ளைகளின் ஜெபத்தை மட்டும். மத் 6:9

**B.** தகப்பன் - பிள்ளையைப் போன்ற உறவுக்குக் காரணம் இயேசுக்கிறிஸ்து (யோவா 14:6) அவருடைய இரத்தத்தாலே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (எபிரேயர். 2:9-11)

**C.** ஆகையால் தேவன் கீழ்க்கண்டவர்களின் ஜெபத்தை மட்டுமே கேட்கிறார்.

1. நீதிமான்கள். யாக் 5:16; 1 பேதுரு 3:12
2. கீழ்ப்படிதலுள்ளவர்கள். 1 யோவா 3:22
3. அவருடைய சித்தம் செய்யும் அவருடைய பிள்ளைகள். மத் 6:9. 1 யோவா 5:14

## III .இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கவேண்டும்.

**A.** நாம் அவருடைய நாமத்தில் ஜெபிக்கவேண்டும். யோவா 14:13-14. 15:16,16:24,26

**B.** இயேசுவின் நாமத்தில் என முடிப்பது ஏதோ ஜெபத்திற்கு அழகு சேர்ப்பதற்கு சொல்லப்படும் வார்த்தை அல்ல.

1. இதன் பொருள், நான் " அவருக்குள்ளாக" ஜெபிக்கிறேன் என்பது.
2. மேலும், நான் அவருடைய ஒப்புதலோடும், அவருடைய அந்தஸ்தின் ஆதரவோடும். இன்னும் அவர் நமக்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடும் ஜெபிக்கிறேன் என்பதே இதன் பொருள்.

## IV ஜெபிப்பதற்கு தேவையான மனநிலை

**A** ஒரு மாய்மாலக்காரனைப் போலல்லாமல், உண்மையோடும், நேர்மையோடும் தேவனை அணுகவேண்டும்

**B.** ஜெபிக்கும்போது கீழ்க்கண்டவைகளைத் தவிர்க்கவேண்டும்.

1. மனிதரால் வரும் புகழ்ச்சிக்காக ஜெபிப்பது மத் 6:5,8
2. வீண் வார்த்தைகளை அலப்புவது மத். 6:7
3. அதிக வார்த்தைகளைக் கொண்ட நீண்ட ஜெபம் மத் 6:7; 1 ராஜா 18:26

**C.** ஜெபிக்கும்போது

1. தேவனை விசுவாசிக்கவேண்டும். மாற்கு 11:23-24 ; 9 : 23
2. தனிமையில் ஜெபிக்கவேண்டும். மத் 6:6
3. நம்பிக்கையோடு (தைரியத்தோடு) ஜெபிக்கவேண்டும். எபி 4:16.

**D.** ஜெபிக்க கற்றுக்கொள்ளுதல்.

1. மாதிரி ஜெபம். (கர்த்தருடைய ஜெபம் அல்ல). மத் 6 : 9 -15
2. ஜெபங்கள் குறிப்பானவைகளாக இருக்க வேண்டும்.
   a. உணவுக்காக நன்றி சொல்லுதல் 1. தீமோ 4:3
   b. வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தல். யாக். 5:13-15
   c. கர்த்தரின் பந்தியின்போது ஜெபித்தல் 1. கொரி 11:23,24
   d. மற்றவர்களுக்காக ஜெபித்தல். யோவா 17:20,21.I. தீமோ 2:1 யாக் 5:16

E. நம்முடைய ஜெபங்களுக்கான தடைகள்:

1. சுயநலத்தோடு ஜெபிப்பது. யாக் 4:3
2. மன்னிக்கும் சுபாவமில்லாதிருத்தல். மாற்கு. 11:25-26
3. விசுவாசக் குறைவு. யாக்.1:6-7
4. பாவம். ஏசாயா. 59:1-2. யோவா 9:31

## V. கிறிஸ்தவர்கள் ஜெபிப்பது சம்பந்தமாக

A உன் வாழ்க்கை முழுவதும் ஜெபி. லூக். 18:1 வச. 2 - 8 எப்பொழுதும் ஜெபிக்கவேண்டுமென போதிக்கிறது.

B. "இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும்" 1 தெச 5:17 ஜெபத்திற்கு தடை வரக்கூடிய காரியத்தை ஒருபோதும் செய்யக் கூடாது.

C. அரசாங்கத்தின் தலைவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். 1 தீமோ 2:1-7

D. சோதனைகளில் பெலன் வேண்டி ஜெபிக்கவேண்டும். மத். 26:41

E. விசுவாசிகளுக்காகவும், இன்னும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்பவர்களின் வாழ்க்கை மீது தேவனுடைய வார்த்தை வெற்றிகொள்ளும்படியாகவும் ஜெபிக்க வேண்டும்.

F. உன் ஜெபத்திற்கு பதில் கிடைக்காமலிருப்பது போலதெரியும்போது, சோர்ந்து போகவேண்டாம். சில நேரங்களில் பதில் இல்லை என்றுதான் இருக்கும். யோவா 15:7 சில சந்தர்ப்பங்களில் நம்முடைய ஜெபங்கள், ஒட்டுமொத்த நன்மைக்காக இல்லாமல் போகும். இன்னும் சில வேலைகளில். நமது ஜெபங்கள் தேவ சித்தத்திற்கு மாறாக இருக்கலாம். 1. யோவா 5:14 ஜெபிக்கின்ற தமது பிள்ளைகளுக்கு தேவன், வேறு வகையான ஒரு திட்டத்தை வைத்திருக்க முடியும்.

**முடிவுரை:**

1. நமது ஜெபங்கள் தேவனை நோக்கி இருக்கவேண்டும்
2. இயேசுவின் நாமத்தில் ஜெபங்கள் ஏறெடுக்கப்படவேண்டும்.
3. அவைகள் விசுவாசத்தோடும், கருத்தோடும் இருக்கவேண்டும்.

**Toney L. Smith** **டோனி ஸ்மித்**

### உங்கள் கவனத்திற்கு

வாசகர்கள் விலாசம் மாறிச் செல்லும்போது, உங்கள் பழைய, புதிய விலாசங்களை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி உடனடியாக எங்களுக்குத் தெரிவியுங்கள். இனிமேல், இதழ் திரும்பி வந்தால், மேற்படி விலாசதாரருக்கு இதழ் அனுப்புவது உடனடியாக நிறுத்தப்படும்.

*- ஆசிரியர்*

# வெளிப்படுத்தின விசேஷம்

## பின்னணி (பாகம் – 5)

கடந்த இரண்டு கட்டுரைகளில். வெளிப்படுத்தின விசேஷ நூலின் பகுதிகளை தவறாகப் புரிந்து கொள்வதில் வேரூன்றியிருக்கிற. பொய் உபதேசங்களடங்கிய, இரண்டு முக்கிய கொள்கைளாகிய ஆயிரம் வருட அரசாட்சி கொள்கை மற்றும் யெகோவா சாட்சி கொள்கை ஆகியவற்றை பரிசோதித்துப் பார்த்தோம். இந்தக் கட்டுரையில் இன்னொரு தவறான "கி.பி. 70 கொள்கை" என்றழைக்கப்படுகின்ற கொள்கையை பார்க்க உள்ளோம். நாம் கடந்த இரண்டு கட்டுரைகளில் படித்த தவறான உபதேசங்களிலிருந்து. குறைந்தது இரண்டு வழிகளில் இக்கொள்கை வேறுபடுகிறது: **1)** கி.பி 70 கொள்கையானது, கிறிஸ்துவின் சபைக்குள்ளிருந்து எழும்பி. அதற்குள்ளாக பரவிய ஒன்று. இது உங்களுக்குள்ளாக இருக்கிறது (நமக்குள்), வெளியிலே இல்லை. (பிரிவினைச் சபைகளிலும் மற்ற மதங்களிலும்) **2)** மற்ற எல்லா பொய் உபதேசங்கள் போலவே, கி.பி. 70 கொள்கையும் மற்ற வேத வசனங்களோடு முரண்படுகிறது; ஆனால், ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்களும், யெகோவா சாட்சிக்காரர்களும், வெளிப்படுத்தலில் உள்ள உருவகப்பகுதிகளை சொல் அர்த்தத்துடன் எடுக்கும்போது, இந்த "கி.பி. 70 கொள்கை"க்காரர்கள் அதற்கு நேர் மாறாக, சொல் அர்த்தம் உடைய பகுதிகளை உருவக முறையில் எடுத்துக்கொள்கிறார்கள்.

இந்த கி.பி. 70 கொள்கையானது, 1971-ம் ஆண்டு அமெரிக்க தேசத்திலுள்ள ஒஹியோ, மாகாணத்தைச் சேர்ந்த "வாரன்" என்னும் பட்டணத்திலிருந்த மேக்ஸ் கிங் என்பவரால் கிறிஸ்துவின் ச பைக்குள்ளாக அறிமுகப்படுத்தப்பட்டது. அது முதல், குறிப்பாக சமீபகாலத்தில் இந்த இயக்கம் அமெரிக்காவிலும், உலகின் பல பகுதிகளிலும் தன்னை பின்பற்றுபவர்களை பெற்றுக்கொண்டது. இந்தக் கொள்கை, இந்தியாவில் 1998-ம் ஆண்டு கிறிஸ்துவின் சபைக்குள்ளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இக்குறிப்பிட்ட கொள்கை பற்றி நாம் படிப்பதற்கு, இது இன்னொரு சிறந்த காரணமாகும். நாம் ஒவ்வொருவரும், இந்தக் கொள்கையைக் காணும்போது, அடையாளம் கண்டு, இதை மறுப்பதற்கு ஆயத்தமுள்ளவர்களாக இருப்பது அவசியம். இது ஒரு "அப்பாவித்தனமான" கொள்கையுமல்ல . அல்லது சகிப்புத்தன்மையோடு கண்டுக்காமலிருக்ககூடியதுமல்ல. ஏனெனில், கி.பி. 70 கொள்கையானது ஏற்கனவே உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சொல்லி, IIதீமோ 2:16-18ல் இமெநெயும், பிலேத்தும் செய்ததுபோல் ஆத்துமாக்களை அழித்து, விசுவாசத்தை கவிழ்த்துப்போடக்கூடியதாக உள்ளது.

இங்கே, அதிகத் தவறும் மிகுந்த விநோதமுமான இக்கொள்கை பற்றி கொஞ்சம் சுருக்கமாக கவனியுங்கள். இந்த கி.பி. 70 கொள்கையானது,

வெளிப்படுத்தின விசேஷத்தை தவறாகப் புரிந்து கொண்டதின் மூலம் வந்த இரண்டு தப்பான கண்ணோட்டத்தை மையமாகக் கொண்டுள்ளது. 1)இக்கொள்கைக்காரர்கள். தீர்க்கதரிசனத்தின் ஒரு உருவக விதம் அல்லது வகையை வலியுறுத்துகிறார்கள். வெளி 19:10, இவ்விதம் சொல்கிறது. "அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்: தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்". கி.பி. 70 கொள்கைக்காரர்கள் இந்த வசனம் தீர்க்கதரிசனத்தின் தன்மை பற்றி பேசுகிறது என்று கூறுகிறார்கள். "தீர்க்கதரிசனத்தின் ஆவி" என்பது. எல்லா தீர்க்கதரிசனமும் அதன் தன்மையில் "ஆவிக்குரியது" என்றும். அவைகள் கிறிஸ்துவின் ஆவிக்குரிய கிரியைகளோடு பொருந்தக் கூடியதென்றும் சொல்கிறார்கள். ஆகையால். புதிய ஏற்பாட்டின் எல்லா தீர்க்கதரிசனங்களும். உருவக முறையில் நிறைவேறிவிட்டதென்றும் வாதிடுகிறார்கள். அவர்களைப் பொறுத்தளவில். எதற்குமே சொல் அர்த்த முறையிலான நிறைவேறுதலில்லை. புதிய ஏற்பாட்டின் எந்த தீர்க்கதரிசனத்தையும் அல்லது எல்லா தீர்க்கதரிசனத்தையும் புரிந்து கொள்வதற்கு "உருவகரீதியிலான முறை" கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். 2) இக்கொள்கை. தீர்க்கதரிசனத்தின் "காலத்தை"யும் மிக அதிகமாக வலியுறுத்துகிறது. வெளி 1:1-3 வசனப்பகுதியானது "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை"க் காட்டுகிறது எனக் கூறுகிறது. ஆனால். இந்த கி.பி. 70 கொள்கைக்காரர்கள். இதன் பொருள் வெளிப்படுத்தலில் உள்ள எல்லாமும் இன்னும் வேதாகமத்தின் பிற நூல்களில் உள்ள அனைத்தும் அதினதின்படி கி.பி 70ல் நிறைவேறுமென்று சொல்லுகிறார்கள். இதற்கு முந்தின கட்டுரையில். வெளிப்படுத்தல் நூல். கி.பி 96-ல் எழுதப்பட்டதென்பதற்கான பலமான ஆதாரங்களைப் பார்த்தோம். ஆனால். இந்த "கி.பி. 70 கொள்கைக்காரர்கள்" இந்நூல் ரோமச் சக்கரவர்த்தி "நீரோ" வின் காலத்தில் எழுதப்பட்டதென்று. அதாவது கி.பி. 67 அல்லது 68-ல் எழுதப்பட்டதென்று வலியுறுத்துகிறார்கள். அதுமாத்திரமல்ல. வெளிப்படுத்தலில் உள்ள அனைத்தும் மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற வேண்டியதாக இருந்ததென்று சொல்லுகிறார்கள். அதன் பொருள். வெளிப்படுத்தலில் உள்ள எல்லாம் (ஒட்டுமொத்த வேதாகமம் உட்பட) கி.பி. 70-ல் முழுமையாக நிறைவேறிவிட்டது என்பதாகும்.

இக்கொள்கையை "கி.பி. 70 கொள்கை" என்று சொல்வதற்கான காரணம் என்னவெனில். இக்கொள்கை கி.பி. 70-ம் ஆண்டை முக்கியமாகவும் தீர்க்கதரிசனத்தின் மையமாகவும் கொண்டுள்ளது. இக்கொள்கையை நம்புபவர்கள். கி.பி. 70ல்தான் யூதமார்க்கம் (இஸ்மவேல்) முடிக்கப்பட்டு. கிறிஸ்தவம் (ஈசாக்கு). "ஆவிக்குரிய" சொல் அர்த்த ரீதியற்ற சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதென்று சொல்கிறார்கள். பரலோகத்தில் நம்முடைய நித்திய சுதந்திரத்திற்கான தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலென்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்! மேலுமாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முடிவின் காலத்தை அறிமுகப்படுத்தினதென்றும். அது கி.பி. 70-ல் முடிந்துபோனதென்றும்

சொல்கிறார்கள். இவர்களைப் பொறுத்த அளவில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், நியாயத்தீர்ப்பின் நாளும் எருசலேமுக்கு விரோதமாக உருவக ரீதியில் வருகின்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பாகும். ஆகவே, இவர்கள், கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்பட்டபோது, தேவன் எருசலேமுக்கு விரோதமாக "வந்து" அதை நியாயந்தீர்த்துவிட்டார் என்று சொல்கிறார்கள். கர்த்தர் ஒரு நாளில் மீண்டும் வருவார் என்பதை அவர்கள் விசுவாசிப்பதில்லை. அதைப்போலவே, நியாயத்தீர்ப்பின் நாள் என்று ஒன்று இருப்பதையும் விசுவாசிப்பதில்லை. அவர்களைப் பொறுத்தளவில் உலகத்தின் முடிவு என்பது கி.பி. 70-ல் நடந்தேறிய யூத சகாப்தத்தின முடிவாகும். மற்றும் புதிய வானம், புதியபூமி என்பது கிறிஸ்தவத்தைக் குறிக்கிறதென்றும், அது உண்மையில் கி.பி. 70-ல் ஆரம்பமாகியுள்ளது. மேலும், இது நித்திய ஜீவனுக்கான துவக்கத்தை அடையாளப்படுத்துகிறதென்றும் சொல்கிறார்கள்.

இறுதியாக, இமனேயும், பிலேத்துவையும் போல, இந்த கி.பி. 70கொள்கையானது, உயிர்த்தெழுதல் என்பது உருவக ரீதியிலானது மாத்திரம் என்றும், அது முடிந்து போயிற்று என்றும் சொல்கிறது. மேலும், இக்கொள்கை, "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்" என்பவர்கள், ஆவியில் மரித்தவர்களாயிருந்த சரீரப்பிரகாரமான யூதர்களென்றும் அவர்களில் அநேகர் கி.பி. 70ல் கிறிஸ்துவுக்காக மனமாற்றப்பட்டு (உயிர்த்தெழுந்தனர்), ஆவியில் ஜீவித்துக்கொண்டிருந்த பிற கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து கொண்ட படியால், இது தான் உயிர்த்தெழுதலேயொழிய வேறல்ல என்றும் சொல்கிறது. உண்மையில் மரித்தவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனே கூட பரலோகத்தில் என்றென்றும் இருப்பார்கள் என்பதற்கு மாறாக, அவர்கள், எல்லா கிறிஸ்தவர்களும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து "உயிர்த்தெழுந்து" சபையிலே கிறிஸ்துவுடனே கூட என்றென்றும் இருப்பார்கள் என்று சொல்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் உள்ள எந்த தீர்க்கதரிசனமும் சொல் அர்த்தம் உடையதல்ல என்று அவர்கள் சொல்வதை மறந்து விடாதீர்கள். அதாவது அதன் பொருள், உண்மையில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பின் நாள், உயிர்த்தெழுதல், உலகத்தின் முடிவு, நமது நித்திய பலனாகிய பரலோகம் ஆகியவை சொல் அர்த்த முறையில் நடக்கப்போவதில்லையென்பதாகும். வேதம் தெளிவாகச் சொல்லும் இக்காரியங்களில் விசுவாசம் வைத்திருக்கும் ஒருவனை அவர்கள் "மாம்சப்பிரகாரமாக" சிந்திக்கிறவர்களென்று வாய் கூசாமல் சொல்லிவிடுவார்கள்.

இந்த கி.பி. 70 கொள்கை மிக விபரீதமானது. இதை விசுவாசித்து யாரும் இரட்சிப்படைய முடியாது! தீர்க்கதரிசனத்தின் "வீதம்" மற்றும் " காலம்" பற்றி இவர்கள் கொண்டு வருவதற்காக பயன்படுத்தும் வெளிப்படுத்தலில் உள்ள பகுதிகள் சம்பந்தமாக: முதலாவது, வெளிப்படுத்தல் 19:10-ல் உள்ள பகுதியானது சொல் அர்த்த ரீதியிலானதா அல்லது உருவக முறையிலானதா என்பது பற்றி பேசுவதில்லை. இந்த வசனமானது தீர்க்கதரிசனம் தூதனிலிருந்து ஆரம்பமானது, என்ற நினைப்புடன் இவன் தன்னோடு பேசின தூதனை வணங்கக்கூடாது என்று சுட்டிக்காட்டுகிறது. மாறாக, இது இயேசுவைக் குறித்த சாட்சியாகும். அவருடைய சாட்சி, "ஆவியாய்" அதாவது, தீர்க்கதரிசனத்தின்

ஆதாரமாக அல்லது மூலகாரணமாக இருக்கிறதென்று இங்கே குறிப்பிடப்படுகிறது அந்த தீர்க்கதரிசனம். தூதனிடமிருந்து வராமல், தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறது. ஆகவே. யோவான் தூதனை வணங்காமல் தேவனை வணங்கவேண்டும்.

அதுபோலவே. வெளி. 1:1-3 வேத பகுதியும் வெளிப்படுத்தலில் உள்ள ஒவ்வொரு காரியமும் அல்லது வேதாகமத்தின் எந்தவொரு புத்தகத்தின் பகுதியும் ஒன்றிரண்டு வருடங்களில் நிறைவேறுமென்று பொருள் கொடுப்பதில்லை. இதுதவிர. வெளிப்படுத்துதல் கி.பி. 70க்கு வெகுபிறகுதான் எழுதப்பட்டதென்பதற்கு நிறைந்த ஆதாரங்கள் உள்ளது.

கி.பி. 70 கொள்கையானது. வேதாகமத்தின் பல வசனப்பகுதிகளோடு முரண்படுகிறது. இக்கொள்கையைப் புரிந்து கொள்வதற்கும். விசுவாசிப்பதற்கும் கடினமானது. முதலாவது. பரலோகம் "உண்மையானது", அது பிதாவும், குமாரனும் வாசம் செய்யக்கூடிய இடம். (எபி 9:24;6:20). இயேசு உண்மையாகவே, நமக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்வதற்கு பரலோகத்திற்கு ஏறிச் சென்றுள்ளார். (யோவா.14:2) அத்தோடு. அப் 1:11ல் இயேசு பூமியிலிருந்து எப்படிப்போனாரோ அப்படியே திரும்ப வருவார் என்று அப்போஸ்தலர்களிடத்தில் தூதர்கள் சொன்னார்கள். மேலுமாக. அவர் திரும்பவரும்போது. அவருக்கு உண்மையுள்ளவர்கள் அனைவரும், கல்லறையிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள் அல்லது மறுரூப மாக்கப்படுவார்கள். (1 கொரி 15:34-54) (1 தெச 4:13-18). கிறிஸ்தவர்கள் சொல் அர்த்த முறையில் கிறிஸ்துவை ஆகாயத்தில் சந்தித்து, அவரோடுகூட பரலோகத்திற்கு செல்வார்கள். இந்த உலகமானது தற்காலிகமானது. அது ஒரு நாளில் அக்கினிக்கு இரையாக்கப்படும். (2 கொரி 4:18; 2 பேதுரு 3:10-13) நினைவில் வைத்துக்கொள்ளும்படியாக ஒரு முக்கியமான கருத்தை இங்கே கவனியுங்கள். இயேசுவின் ஊழியமும். உபதேசமும் நித்தியத்தை மையமாக கொண்டுள்ளதாய். புதிய ஏற்பாட்டில் உள்ள எதுவும் சொல் அர்த்த முறையில் இல்லையென்று ஆவிக்குரிய காரியங்கள் பொருள் தருவதில்லை. ஆவிக்குரியதும். சொல் அர்த்தமுடையதும் ஒன்றுக்கொன்று எதிரானதல்ல. உதாரணமாக. பரலோகம் என்பது ஆவிக்குரிய இடமாகவும், சொல் அர்த்த ரீதியில் உண்மையானதாகவும் உள்ளது. அதைப்போலவே. உயிர்த்தெழுதலும். சொல் அர்த்தமுடையதாகவும் உள்ளது.

இயேசுவின் இரண்டாம் வருகை. உலகத்தின் முடிவு. உயிர்த்தெழுதல். நியாயத்தீர்ப்பு. நமது நித்திய வாசஸ்தலமான பரலோகம் ஆகிய இவைகளை உண்மையாகவே சொல் அர்த்த ரீதியில் விசுவாசிப்பது மாம்ச சிந்தை ஆகாது; இது தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதாகும்! நாம் கி.பி 70 கொள்கையால் வஞ்சிக்கப்படாமலும் அல்லது இந்தியாவில் இக்கொள்கை காலூன்ற அனுமதியாமலும் இருப்போமாக. இத்தவறான கொள்கை. வெளிப்படுத்தல் நூலுக்கு தவறான அணுகுமுறை கொண்டு. சொல் அர்த்தமுறையில் உள்ளதை உருவகமாக எடுத்து. பிற வேத வசனங்களோடு முரண்படுவதால் வரும் பயங்கரத்தை விளக்குகிறது.

நமது அடுத்த கட்டுரை. வெளிப்படுத்தல் நூலில் சொல்லப்பட்டுள்ள சில முக்கியமான பாடங்கள் குறித்து வெளிவர உள்ளது.

**EZSR** **JON MACON**

## வாலிபர் பகுதி

# ஊழியர்களை உண்மையாய் உபசரித்தவன்

மனிதன் தேவனிடத்திலிருந்த உறவை இழந்து பாவப்பிடியில் சிக்கி ஜீவன் இழந்தவனாயிருக்கையில் நமக்காக மரித்து நித்திய ஜீவனை அளிக்கும் ஜீவாதிபதியாயிருக்கிற, கிறிஸ்து இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். கதிரவன் தோன்றும் காலையில் மலர்ந்து, மாலை மயங்கும் வேளையில் உதிரும் புஷ்பத்திற்கு வாழ்க்கை ஒப்பானால், அதன் நறுமணம் கமழும் நேரம் இவ்வாலிபப்பிராயத்திற்கு ஒப்பாகும். இத்தகைய பருவத்தில் வாழும் நீங்களும், பிறருக்கு இனிய வாசனை வீசும் குணமுடையவர்களாய் இருக்க வேண்டுமென்பதை அறியுங்கள். இக்குறுகிய வாழ்க்கையை தம் குருதி சிந்தி நம்மை மீட்ட கிறிஸ்துவுக்கு தத்தம் செய்ய வேண்டுமென்பதே தேவனின் சித்தம்.

செழிப்பான தோட்டத்தில் விளைந்த கனிகளை கொண்ட களஞ்சியம் போல் தேவன் தந்த ஞான தோட்டத்தில் விளைந்த அறிவுக் கனிகளை கொண்ட களஞ்சியமாம், நீதிமொழிகளில் சாலொமோன் செப்புகையில் "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்..." என்கிறார். (நீதி 28:20). ஞானியின் கூற்றை கூர்மையாய் கவனித்தீர்களா? உண்மை யுள்ளவனுக்கு தேவன் பரிபூரண ஆசீர்வாதத்தை பரிசாய் தருவார் என்கிறார். நாம் மெய் ஊழியர்களை அடையாளம் கண்டு உண்மையாய் அவர்களை உபசரிப்பதின் உபகாரமாய், நிறைவான ஆசீர் வாதத்தை நித்தியரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காய், உபத்திரவம் வந்த போதும், ஊழியர்களுக்கு உதவின தெசலோனிக்கே பட்டணத்தானாகிய "யாசோனை" உங்கள் முன் நிறுத்துகிறேன்.

### ஊழியர்களை அன்பாய் ஏற்றுக் கொண்டான்:-

மனிதன் தன்னை வனைந்த குயவனாகிய தேவனின் உறவை, சாத்தான் விரித்த வஞ்சக வலையில் விழுந்து, தான் செய்த பாவத்தால் அவ்வுறவை இழந்து அதனால் வரும் பின்விளைவுகளால் தவித்து கொண்டிருப்பதில் இருந்து தப்பிக்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும். என்ற தயாள எண்ணத்தால், பரத்தின் மகிமையை துறந்து, அகிலத்தையும் படைத்த வார்த்தையான இயேசு, பாவியான மனிதனுக்காய் சொல்லி முடியாத பாடுகள் பட்டு, மரணத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் தன் ஜீவனைத் தந்து, சொன்னபடி மூன்றாம்நாளில் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். அவர் செய்த இந்த தியாகத்தால் இரட்சிப்பின் சுவிசேஷம் மனித குலத்துக்கு, விமோசனம் ...யும்

வழியை வெகுமதியாய் பெற்றுத் தந்தது (1 கொரி 15:1 4)

மகிமையான இயேசுவினுடைய சுவிசேஷத்தின் ஒளி எங்கும் சுடர்விட்டு பிரகாசிப்பதின் மூலம், மனிதகுலம் மீட்பரை கண்டுகொள்ள வேண்டுமென்பதில் தனி கரிசனை கொண்டு செயல்பட்ட ஆதித் திருச்சபையை தடுத்து, அச்சபையார் மீது வீண்பழி சுமத்தி அநேகரின் இரத்தப் பலிக்கு ஆளான சவுல், சாந்த சொரூபியாயிருக்கிற இயேசுவின் மகிமையான பேரொளியை தமஸ்குவின் சாலையில் தரிசித்த பின், தான் செய்து கொண்டிருந்த தவறுகளை பற்றி சிந்தித்து, பின்பு தேவனின் வார்த்தைக்கு தன்னை கீழ்ப்படுத்தினான். அதன் பிறகு இழந்த நேரத்தை மீட்கும் பொருட்டாய் சுவிசேஷப் பயணத்தை மேற்கொண்டான் சவுலாகிய பவுல், அவனும் மற்றவர்களும் இரண்டாம் முறை பயணித்த போது "அவர்கள் அம்பிபோலி பட்டணத்தையும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்...(அப் 17:1) இங்கு தான் நமது யாசோனை அவர்கள் சந்திக்க நேரிட்டது.

பவுல் தனது வழக்கத்தின்படி, யூதர்களின் ஜெப ஆலயத்தில் இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தினான் (அப் 17:3) தேவனுடைய காரியங்களை தெளிவுபடுத்தும் அப்போஸ்தலனாகிய பவுலையும், மற்றவர்களையும் யாசோன் ஏற்றுக் கொண்டான் (அப் 17:7) அநேகமாக இவர்கள் இராத்தங்கும்படி வீட்டையும் திறந்து கொடுத்திருப்பான் என்றே நம்பலாம். ஏன் என்றால், விசுவாசியாத யூதர்கள் பவுலையும் மற்றவர்களையும், துன்புறுத்த வேண்டும் என்று யாசோனின் வீட்டிற்குத் தானே தேடிப் போனார்கள். (அப் 17:5) பலத்த எதிர்ப்புகளை எதிர்நோக்கிக் கொண்டிருந்த ஆதித் திருச்சபையைச் சார்ந்த பவுலை ஏற்றுக் கொண்டால், இன்னல்கள் பல வந்து சேரும் என்பது சாதாரண மனிதனுக்குகூடத் தெரியாத விஷயமல்ல, அப்படித் தெரிந்திருந்தும் இனிய இதயத்துடன் இவர்களை இல்லத்தில் ஏற்றிருக்கிறானென்றால் அவனின் நற்குணம் நானிலம் போற்றக் கூடியது என்பதில் சந்தேகமில்லை.

வாலிபர்களாகிய நமக்கு இவன் என்ன பாடம் தருகிறான் என்பதை கவனிப்போம். கடவுளுடைய காரியங்களை நம் ஆத்துமா மீது அக்கறையுடனும், அன்புடனும், கரிசனையுடனும் நமக்கு எடுத்துரைக்கும் ஊழியர்களை நாம் அன்பாய் ஏற்றுக் கொண்டு உபசரிப்பது நம்மேல் விழுந்த கடமையாகும். ஊழியர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதன் பலனை நாம் அடையாமற் போகமாட்டோம். (மத் 10:42) என்பதை அறியுங்கள். ஆனால் பணஆசை கொண்டு, வயிற்றுப் பிழைப்புக்கு இறைவனின் நாமத்தைச் சொல்லி நயவசனிப்பால், கவின் மிகு

காட்சிகளை தங்கள் கற்பனையால் நம் மனக்கண் முன்நிறுத்தி வஞ்சிக்கிற பட்சிக்கும் ஓநாய்களை பாரபட்சமின்றி ஒதுக்கித் தள்ள வேண்டும் (II யோவா 10)

வாலிபர்களாகிய நாம் உண்மை ஊழியர்களை கண்டு கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் உபதேசிப்பது வேதாகமத்தின் அடிப்படையில் இருக்கிறதா என்று கண்டு கொள்ள வேண்டும் (I பேது 4:11) அதற்கு முதலில் நாம் அனுதினமும் வேதத்தை தியானிக்கிற இளைஞர்களாய் மாற வேண்டும். இளைஞர்கள் இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அனுதினமும் வேதத்தை வாசிக்கிறவர்களாய் மாத்திரம் இருப்பது போதாது என்பதை வலியுறுத்தவே 'தியானிக்கிற இளைஞர்களாய்' இருக்க வேண்டும் என்று எழுதினேன். அப்படிப் பட்டவர்களாய் மாறுவோம், நாம் பாக்கியவான்களாய் இருப்போம். (சங் 1:2)

## கஷ்டங்கள் வந்த போதும் காட்டிக் கொடுக்காதவன்:-

சற்குணனாகிய யாசோன், பவுலையும், மற்றவர்களையும் தன்னோடு ஏற்றுக்கொண்டான். ஒருவேளை பலர் இப்படி நினைக்கலாம். வீட்டிற்கு வந்தவர்களை வராதீர்கள், போங்கள் என்றா சொல்ல முடியும், ஏதோ அரைகுறை மனதுடன் ஏற்றுக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறதல்லவா, யாசோனும் அந்த ரகமாயிருப்பானோ என்னவோ வென்று, நினைப்பதில் தவறில்லை மனித இயல்புதானே. அதுவும் சிந்தனையை காட்டுத் தீ போல் பரவவிடும் இளைஞர்களை பற்றி சொல்லவா வேண்டும்! ஆனால் யாசோன் இதற்கு முற்றிலும் மாறானவன், என்று சொன்னால் அது மிகையாகாது.

கிறிஸ்துவின் போர்ச் சேவகர்களை ஏற்றுகொண்ட இவனுக்கு பாடுகள் பரிசாய் பின் தொடர்ந்தது. ஜீவனுள்ள தேவனுடைய வசனங்கள் உண்மையும், சத்தியமுமாய் அல்லவா இருக்கிறது. அது பொய்த்தா போகும். வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்" (IIதீமோ 3:12) யாசோனுக்கும் துன்பம் துரிதமாய் வந்தது, விசுவாசியாத யூதர்கள் வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைத்துக்கொண்டு, பவுலையும் மற்றவர்களையும் இழுத்து வர வகை தேடினார்கள். (அப் 17:5)

இளைஞர்களாகிய நாம் நமது கற்பனைக் குதிரையை ஓடவிட்டு இந்த காட்சியை நம் மனக்கண் முன் நிறுத்தினால், யாசோன் சந்தித்த சங்கடங்களும், சச்சரவுகளும் நமக்கு நன்றாய் புரியும். வீட்டை வளைத்துக் கொண்டவர்கள் என்னவெல்லாம் செய்யப் போகிறார்களோ? என்ற அச்சம் அவனுக்கு வந்திருக்க வாய்ப்புண்டு.

ஒரு வேளை. யாசோனை கொலை செய்ய கூட துணிவார்கள் இந்த தற்குறும்பர்கள். இளைஞர்களே, என்ன வந்தாலும் இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்த விசுவாசத்தை கடுகளவும் குறைத்துக் கொள்ளக் கூடாது. நாம் கற்றுக்கொள்ளும் மற்றொரு பாடம் வீணர்களையும், பொல்லாதவர்களையும் நம்மோடு கூட்டு சேர்க்கக் கூடாது. ஞானி சாலொமோனின் நீதிமொழிகள் கூறுவதைக் கவனியுங்கள்.... வீணரை பின்பற்றுகிறவனோ மதியற்றவன் (நீதி 12:11) நாம் மதியற்றவர்களாகவா இருக்க விரும்புவோம்? இல்லை என்பதே உங்கள் மறுமொழியாக இருக்க வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடுகிறேன்.

யாசோன் தன் வீட்டைச் சுற்றி வளைத்த யூதர்களுக்கு அஞ்சி, பவுலையும் மற்றவர்களையும், ஈவு இரக்கமின்றி காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலை செய்திருப்பான் என்று நினைக் கிறீர்களா? அவன் அப்படிப் பட்டவன் அல்ல, தன்னை தெருவில் இழுத்துக்கொண்டு போன போதிலும் இவன் காட்டிக் கொடுக்கும் ஈனச் செயலை செய்யவில்லை. செய்திருந்தால்! உலகத்தைக் கலக்குகிறவர்களை இவன் கள்ளர்கள் கையில் அல்லவோ ஒப்புக் கொடுத்திருப்பான். ஆனால் அவனோ "இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்து கொள்ளுங்கள்" (கொலோ 3:14) என்ற வசனத்தை வாழ்க்கையில் பயிற்சி செய்யக் கூடியவனாய் இருந்தான்.

சுவிசேஷ வீரர்களை இவன் காட்டிக் கொடுக்காமல் இருந்ததற்கு வேறு அநேக காரணங்கள் இருக்கலாம். ஆனால் சுவிசேஷத்தின் மீது அளவற்ற அன்பு கொண்டு. அது எத்திக்கிலும், விரிவடைந்து அநேகரை இயேசுவண்டை கொண்டு வந்து சேர்க்கும் கலங்கரை விளக்கமாய் திகழ வேண்டும் என்ற ஆவல் கொண்டு, அதை சுமந்து வந்த இவர்களை காட்டிக்கொடுக்காமல், துன்பத்தை துணிவாய் எதிர் கொண்டிருக்கக் கூடும். சுவிசேஷம் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் (ரோமர் 10:15) என்று அறிந்ததால்தான் பாதகங்கள் எதுவும் செய்யாமல், அவர்களுக்காக ஜாமீன் எழுதி கொடுக்கவும் துணிந்தான்.

வாலிபர்களே, இந்தக் கலப்படம் நிறைந்த உலகில் உண்மை சத்தியத்தை அறிந்து, நமக்கும் அதை எடுத்துரைக்கும் ஊழியர்களை நாம் மேன்மை படுத்த வேண்டும். நாம் எதை விதைக்கி றோமோ அதையே அறுப்போம். யாசோனைப் போல் நாமும் தேவ ஊழியர்களை கனம் பண்ணி, அதன் மூலம் தேவனிடமிருந்து கனத்தையும், மகிமையையும், ஆசீர் வாதத்தையும் பெற்று பெருகுவோமாக!

**ஜே. பிக்கின்ஸ்**

# யூதா கோத்திரத்தில் இயேசு

ஆதி முதலாய் தேவன் தம்முடைய சித்தத்தை இந்த பூமியில் நிறைவேற்றுவதற்கு ஒரு சில குறிப்பிட்ட மனிதர்களை, குடும்பங்களை, கோத்திரங்களை, வம்சங்களைத் தெரிந்தெடுத்து தம்முடைய திட்டங்களை மிக நேர்த்தியாய் செயல்படுத்தி வருகிறார். அப்படி அவர் தெரிந்தெடுக்கும் முன்னறிவு அவருடைய அநந்த ஞானத்திற்கும், அவருடைய மகிமைக்கும், அவருடைய முழு சுதந்திரத்திற்கும் உட்பட்டது. என்றாலும், அந்த குறிப்பிட்ட நபர்களின் விசுவாசமும், அவர்களுடைய கீழ்ப்படிதலும், அவர்களிடம் காணப்பட்ட சில விசேஷித்த நற்குணங்களும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு படிப்பினையாகவும், போதனைகளாகவும் இருப்பதை நாம் அறிவோம். (ரோமர் 15:4; 1 கொரி 10:12) உதாரணமாக, விசுவாசிகளின் பட்டியல் எனக் கருதப்படுகின்ற எபிரெயர் பதினொராம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு விசுவாசிகளின் சாதனைகளும், அவர்களுடைய ஒவ்வொரு விசுவாசிகளின் சாதனைகளும், அவர்களுடைய உயர்ந்த நற்பண்புகளும் ஆவிக்குரிய கிறிஸ்தவ ஜீவியத்தில் நமக்கு பெரிதும் உதவியாகவும், துணையாகவும் இருக்கிறதல்லவா? சரி. இப்போது நம்முடைய பாடத்திற்கு வருவோம். யாக்கோபின் வம்சமாக பன்னிரண்டு கோத்திரங்கள் அவனுடைய கோத்திரத்தில் தான் இயேசு பிறக்க வேண்டும் என தேவன் ஏன் விரும்பினார்? யூதாவின் செயல்பாடுகள் எந்தவகையில் தேவனைப் பிரியப்படுத்தின? இந்த யூதாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன? என்பதை இனி ஆராய்வோம்!

## யூதா அற்பமாய் எண்ணப்பட்ட வயிற்றில் தோன்றினான்

யாக்கோபுவின் மாமனாகிய லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள் மூத்தவள் பெயர் லேயாள். இளையவள் பெயர் ராகேல். லேயாள் ராகேலைக் காட்டிலும் அற்பமாய் எண்ணப்பட்டாள். இளையவளும் ரூபவதியுமாகிய ராகேலைத்தான் யாக்கோபு அதிகமாய் நேசித்தான். ஆனால் தேவனுடைய சித்தமோ வேறுவிதமாயிருந்தது. அற்பமான ஆரம்பம், அற்பமான மனிதர். அற்பமான காரியங்களையே தேவன் தெரிந்து கொள்கிறார். ஆம்! அற்பமாய் எண்ணப்பட்ட லேயாளுக்குப் பிறந்த குமாரர்களில் ஒருவன் தான் இந்த யூதா. தேவகுமாரனாகிய கிறிஸ்து, மாம்சத்தில் இயேசுவாகத் தோன்றுவதற்கு தேவன் இந்த யூதா கோத்திரத்தைத் தான் தெரிந்து கொள்கிறார். "உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்" (1 கொரி 1:28) தேவனுடைய சித்தத்தின்படி பரிசுத்த ஆவியால் கர்ப்பவதியான மரியாள், அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார் என்றும், தாழ்மையானவர்களை உயர்த்தினார் என்றும் கூறி தேவனைப் புகழுகிறாள். (லூக்கா 1:46-55) இஸ்ரவேலர்கள் எதிர்பார்த்த மேசியாவாகிய கிறிஸ்து, தமது மாம்ச பிறப்பின் போது மிக அற்பமான இடத்தில், மிக எளிமையான கோலத்தில், முன்னணையில் கிடத்தப்பட்டிருந்தார். தங்களுடைய ராஜா இவ்விதமான ஏழ்மையில்

தோன்றுவார் என்று சற்றாகிலும் இஸ்ரவேலர்கள் எதிர்பாக்கவேயில்லை. இயேசு தம்மை முழுவதும் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தப்பட்டார். பைத்தியமாகத் தோன்றுகின்ற சுவிசேஷப் பிரசங்கத்தினாலே கிறிஸ்து இயேசுவுக்குள் அழைக்கப்பட்டிருக்கிற நாம், உலகத்தோற்றத்திற்கு முன் அற்பமாய் எண்ணப்பட்டாலும், அல்லது நம்மை புறக்கணித்து, ஏளனமாய் பேசினாலும், அதை கவனத்தில் கொள்ளாமல் நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டு, நம்மில் தேவ சித்தம் நிறைவேற செயல்படுவோம்.

## யூதா தேவசித்தத்திற்கு இசைவாயிருந்தான்

யோசேப்பை கொன்று போடும்படி மற்ற சகோதரர்கள் சதியோசனை பண்ணி, ஆலோசிக்கும் போது ரூபன் மாத்திரம் யோசேப்பை அவர்கள் கைக்கு தப்புவித்து, அவனை தங்கள் தகப்பனிடத்திற்குத் திரும்பவும் கொண்டு போக மனதுள்ளவனாய் அங்கு, வனாந்தரங்களிலுள்ள குழியிலே போட்டு விடச் செய்துவிடுகிறான். ஆனால் ரூபனின் நல்லெண்ணம் அன்றைய் தினத்தில் முழுமையாய் நிறைவேறவில்லை. மற்ற சகோதரர்கள் குழியினுள் போட்டுவிட்ட யோசேப்பை எடுத்து, இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிகாசுக்கு விற்றுப் போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். ஆனாலும் தேவனிடத்தில் அன்பு கூர்ந்த யோசேப்புக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடந்தது. சரி, இதில் யூதாவின் பங்கு என்ன? எந்தவிதத்தில் யூதா யோசேப்புக்கு நன்மையாகவும், தேவசித்தத்திற்கு இசைவாகவும் நடந்துகொண்டான் என்று பார்ப்போம். யோசேப்பை கொன்றுபோடும் சதித்திட்டத்தில், அவனை கொன்றுபோட மனதில்லாமல், எப்படியாகிலும் யோசேப்பை உயிரோடே பிழைக்கவைப்பதற்காக இஸ்மவேலருக்கு விற்றுப்போடும்படியாய் யோசனை கூறியவன் இந்த யூதா தான், யோசேப்பைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன? அவன் நம்முடைய சகோதரனும், நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே. எனக்கூறி அவனுக்காக பரிந்து பேசி, தன்னுடைய இரக்க சுபாவத்தையும், சகோதர பாசத்தையும் வெளிப்படுத்துகிறான். (ஆதி 37:26,27) தியாகமே உருவான நமதாண்டவர் இயேசு மனுக்குலத்தின் பாவ விமோசனத்திற்காக தமது மாம்சத்தையும் தமது இரத்தத்தையும், ஜீவனையும் தந்து, தேவ அன்பையும், சகோதர பாசத்தையும், வெளிப்படுத்தினார். எகிப்துக்குச் சென்ற யோசேப்போடே கூட கர்த்தர் இருந்தபடியால் யோசேப்பு உயர்த்தப்பட்டான். அநேக வருடங்களுக்கு பிறகு தன் சகோதரர்களைக் கண்ட யோசேப்பு, தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துகையில் பின்வருமாறு கூறுகிறான். கவனியுங்கள். "அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி என் கிட்ட வாருங்கள் என்றான். அவர்கள் கிட்டப் போனார்கள்: அப்பொழுது அவன் நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப் போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான். என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்: அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்: ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். என்றும் பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்திற்கு

அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார் என்றான் (ஆதி 45:4-8) இவ்விதமாய் தேவசித்தம் யோசேப்பினால் நிறைவேற யூதாவும் ஒரு தூண்டுகோலாய் இருந்தான் என்பதில் வியப்பில்லை. கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்ட தேவனுடைய ஜனங்கள் அனுதினமும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடும், நடுக்கத்தோடும் தங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டால், தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் அவர்களில் உண்டாக்குவார் என்பதிலும் ஆச்சரியமில்லை. (பிலி 2:12,13)

## யூதா ஜீவனுக்கு உத்தரவாதியாய் இருந்தான்

யோசேப்பின் நாட்களில், எகிப்து தேசமெங்கும் பஞ்சம் உண்டானபோது, சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியங்கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள். யோசேப்பு அத்தேசத்துக்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் தானியங்களை விற்றான். எகிப்திலே தானியங்கள் உண்டென்று யாக்கோப்பு அறிந்து, தன் குமாரரில் யோசேப்பின் உடன்பிறந்த தம்பியாகிய பென்யமீனை தவிர்த்து, மற்ற பத்துகுமாரர்களையும் தானியங்கொள்ளும்படி எகிப்துக்கு அனுப்பினான். தன்னிடத்தில் வந்தவர்கள் தன் சகோதரர்கள் என்று யோசேப்பு அறிந்து கொண்டான். ஆனாலும் அறிந்தும், அறியாதவன் போலக் கடினமாய் பேசி, அவர்கள் தேசத்தை சுற்றிப் பார்க்க வந்த வேவுக்காரர்கள் என்று பொய்யாய்க் கூறி, அவர்களத வாயின் வார்த்தைகளாலே அவர்கள் தாங்கள் யார் என்பதைக் கேட்டு, அவர்களது உண்மையை சோதித்தறிகிறான். பிறகு தனது தாய்குப் பிறந்த உடன் தம்பியாகிய பென்யமீனை தன்னிடத்தில் அழைத்துவர யோசேப்பு கட்டளையிட்டபோது, யாக்கோபுக்கு ஏற்பட்ட துக்கத்தினிமித்தமும், மனசஞ்சலத்தினாலும் பென்யமீனை அவர்களோடு கூட திரும்ப எகிப்துக்கு அனுப்ப மனதில்லாதிருந்தான். ரூபன், பென்மீனுக்காக உத்தரவாதம் பண்ணுவாதாகக் கூறி தன் இரண்டு குமாரரை அதற்காகப் பணயம் வைக்கிறான் (ஆதி 42:37) ஆனால், யூதாவோ தன்னையே பணயம் வைத்து பென்யமீனைத் திரும்ப மீட்டு வருவதாக உத்தரவாதம் பண்ணுகிறான். (ஆதி 43:8-10) உலக இரட்சகரான இயேசு பாவிகளாகிய நம்மெல்லாருக்காகவும் தம்முடைய ஜீவனை பழுதற்ற பலியாக பணயம் வைத்து, நம்மை மீட்டுக்கொண்டார். அவர் தேவனுடைய சித்தத்தை மீட்டுக்கொண்டார். அவர் தேவனுடைய சித்தத்தை முழுமையாய் நிறைவேற்றி, தனக்கு ஒப்புவிக்கப்பட்ட உத்தரவாத ஊழியத்தை மீட்கப்பட்ட நாமும் கூட இயேசுவை கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரன் என்றும் அறியாத ஜனங்களுக்கு நம்முடைய ஜீவனை கூட பணயம் வைத்து அவர்களுக்காக உத்தரவாதம் பண்ணி, ஆத்தும பாரத்தோடே சுவிசேஷ ஊழியம் செய்வோம்.

## யூதா மற்றவர்களை உணர்த்துகிறவனாய் இருந்தான்

யோசேப்பு கட்டளையிட்டபடி, பென்யமீனை அவனிடத்தில் கொண்டு வந்த யாக்கோபின் புத்திரர்களுக்கு தான் யார் என்பதை இன்னமும் வெளிப்படுத்தாமல் மென்மேலும் அவர்களைச் சோதிக்கையில், இறுதியில் தாங்கள் மிகவும் இக்கட்டில் மாட்டிக் கொண்டதை உணர்ந்தபோது அனைவரும் தளர்ந்து, மனம் சோர்ந்து போனார்கள். அத்தருணத்தில் யூதா

மிகவும் தெளிவாய், எதையும் மறைக்காமல், நேர்மையாய் பேசி, யோசேப்பின் மனதைக் கலங்க வைக்கிறான். யூதா இவ்வாறு திட்டமும், தெளிவுமாய் பேசினபோது, யோசேப்பால் தன்னையும், தன் அழுகையையும் கட்டுப்படுத்த இயலவில்லை. அந்த அளவுக்கு யூதா உருக்கத்தோடும், தன் பயணயத் தொகையைக் குறித்து தன் தகப்பனிடத்தில் பேசி ஆணையிட்ட காரியத்தைக் குறித்தும் விவேகமாய் பேசினான். இதற்குப் பிறகும் யோசேப்பால் தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல், தன்னை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்துகிறான். கர்த்தராகிய இயேசுவும் கூட தன்னுடைய வாழ்நாளிலே பலபேரை உணர்த்துவித்தார். பலபேர் தங்கள் தவறுகளை உணர்ந்து, மனம் வருந்தி திருந்தினார்கள். அவருடைய பார்வை பேச்சு, அவருடைய செயல் அவருடைய சிறந்த நற்பண்பு, அவருடைய சிறந்த முன் உதாரணம் அநேகரை உணர்த்தியது. தங்களுடைய பாவங்களை விட்டு அநேகர் மனம் மாறினார்கள். மனம்கசந்து அழுத பேதுரு, அவருடைய பாதங்களில் விலையேறப் பெற்ற தைலத்தைப் பூசின மரியாள், சமாரியஸ்திரீ, சகேயு, இப்படி அநேகரைக் குறிப்பிடலாம். அதுமட்டுமல்ல இன்னும் அவருடைய பிரசங்கத்தால், கிறிஸ்துவின் உபதேசத்தால் அநேகர் உணர்த்தப்பட்டு, இருதயம் குத்தப்பட்டு மனம் மாறி புது வாழ்வு வாழுகிறார்கள். அதைப் போல நாமும் எல்லா காரியங்களிலும், எல்லா சந்தர்பங்களிலும் தேவ ஞானத்தோடு பேசி, அறிவோடும், புத்தியோடும் செயல்பட்டு, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை முன் மாதிரியாய் வைத்து மற்றவர்களை உணரவும், உணர்த்தவும், வைப்போம்.

## முடிவுரை

மூத்த மகனுக்குத் தான் சேஷ்ட புத்திரபாகம், விசேஷித்த பொறுப்பு, உரிமை எல்லாம். ஆனால் யாக்கோபின் சேஷ்டபுத்திரனாகிய ரூபன் தன் தகப்பனுடைய மஞ்சத்தை தீட்டுப்படுத்தினபடியால் யாக்கோபு அவனை சபித்துவிடுகிறான். தங்கள் சகோதரி தீனாள் விஷயத்தில் லேவியும், சிமியோனும் யாக்கோபை மனம் நோகப் பண்ணினார்கள். எனவே யாக்கோபு, சேஷ்டபுத்திரபாகத்துக்கு இணையான எல்லா ஆசிர்வாதங்களையும் யூதாவுக்கு வாரி வழங்குகிறார். ஒருவேளை இதுவும் தேவனுடைய சித்தமே, என்றாலும் தேவனுடைய சித்தம் தன்னில் நிறைவேற யூதா தன்னுடைய செயல்பாடுகளை அமைத்துக் கொண்டான் என்பது மட்டும் உண்மை. ஆகவே தான் சமாதான கர்த்தரின் வருகையை யாக்கோபு யூதா வம்சத்தோடு இணைத்துப் பேசுகிறார். (ஆதி 49:8-12) மேலும் யூதா என்பதற்கு கர்த்தரைத் துதிப்பேன் என்று லேயாள் அர்த்தம் கூறுகிறாள் (ஆதி 29:35) யூதா கோத்திரத்தில் தோன்றிய இயேசு, உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்று முன்னறிவித்ததாக வசனங்களில் வாசிக்கிறோம். தேவன் மனிதனை சிருஷ்டித்த நோக்கம் கூட சிருஷ்டிகராகிய அவரை அறிந்து துதிப்பதற்கும், பக்தியுள்ள சந்ததியைப் பெறுவதற்காகவும் தானே. இயேசு, பிதாவாகிய தேவனுக்கு மகிமையையும், துதியும், கனத்தையும் செலுத்தியது போல், நாமும் தேவனுக்கு மகிமையாக வாழுவோம். மேற்கூறிய படி யூதாவின் செயல்பாடுகள் தேவனுக்குப் பிரியமாயிருந்தபடியால், தேவ சித்தத்தின்படி யூதா கோத்திரத்தில் இயேசுபிறந்தார். நாமும் கிறிஸ்துவுக்குள் நற்பண்புகளை வளர்த்துக் கொண்டால், தேவன், கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுத்துவார்.

- A. செல்வராஜ் (பாண்டிச்சேரி)

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, AUG 99
SEP 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

BOOK-POST

TO

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.